gistered No. M. 2330 'SIDDHANTHAM'
Vol. 24—No. 7

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

லர் 24 | கர ஆடி 1951 ஜுலை | இதழ் 7

உள்ளுறை பக்கம்

பத்திராசிரியர்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவிப் பத்திராசிரியர்: வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்

40, முத்தையா முதலி தெரு, வேளாளதேனும்பேட்டை, சென்னை-6

முக்கிய அறிவிப்பு

நமது சமாஜ ஆண்டு விழாவை 1929-ம் ஆண்டு திருவெண்ணெய்நல்லூரில் தமது சொந்த செலவில் மிகச் சிறப்பாக நடத்தியவரும், 'முருகன் முன்னூல்' 'மெய்கண்டாரும் சிவஞானபோதமும்' முதலிய சமாஜ வெளியீடுகட்குப் பொருளுதவி செய்தவரும், போஷக உறுப்பினருள் ஒருவருமாகிய திரு. M. சின்னசாமி செட்டியார் அவர்களுடைய அறுபதாவது ஆண்டு நிறைவு விழா மிகச் சிறப்பாகத் திருவெண்ணெய்நல்லூரில் 1951 ஆகஸ்ட் 9, 10 தேதிகளில் நமது சமாஜத்தினரால் கொண்டாடப்பெறும். ராவ்பகதூர் க. அரங்கசாமி முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெறும் பாராட்டுக் கூட்டங்களில் திருவாளர்கள் மயிலைக்கிழார் இளமுருகனார், பு. ர. சுவாமிநாதனார், டாக்டர் தேவராஜ முதலியார், இராஜேஸ்வரி அம்மையார் முதலிய தமிழ் அறிஞர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். அனைவரும் வருக.

செய்திகள்

காரைக்குடி சிவநேசர் திருக்கூட்டத்தின் திருமுறைப் போட்டிகள் சம்பந்தமாக வெளியிடப்பட்ட திருமுறை மலர் ஒன்றும், ராம, சொ. திருநாவுக்கரசு செட்டியாரின் பேர்த்தி அழகம்மையின் ஓராண்டு நிறைவு நாள் மலராக வந்த 'அருட் பாசுரங்கள்' என்னும் நூலும் வரப் பெற்றோம்.

சென்னைச் சிவனடியார் திருக் கூட்டத்தாரால் திருக் கழுக்குன்றத்தில் ஆறும் ஆண்டு திருமுறைப் பெருவிழா ஜூலை 6, 7, 8 நாட்களில் நடைபெற்றது.

நாகர்கோயில் இந்துமத அபிவிருத்தி சங்கத்தின் ஆதரவில் 9-6-51அன்று சேக்கிழார் விழா கொண்டாடப்பட்டது.

நாகர் கோயிலில் ஜூன் 21, 22, 23, 24 நாட்களில் இந்துமத மகாநாடு நடைபெற்றது.

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 24	கர ஆடி 1951 ஜூலை	இதழ் 7

1. இதய ஒலி

1. விஞ்ஞான விளைவு: சென்ற பெரும் போரில் 'ஹிரோசிமா, நாகசாகி' என்ற நகரங்களின்மீது அணு குண்டு எறியப்பட்டது. பல்லாயிரக்கணக்கான பிரபாதிகள் உயிர் துறந்தார்கள். கணக்கில் அடங்காத வாயில்லாத கால் நடைகளும் மற்ற உயிர்களும் இறந்துவிட்டன. அந்தக் குண்டு வீச்சினால் உயிர்கள் அடைந்த சித்திரவதைக்கு அளவு இல்லை. அசையும் பொருள்களும் அசையாப் பொருள்களும் அளவில்லாமல் அழிவுற்றன. உயிர் மட்டும் போகாமல் பிழைத்த மக்களும் கூன், குருடு, செவிடு, பேடு, அடைந்து துன்புற்றார்கள். இவ்விதமாக அளவற்ற கொடுந் துன்பங்களுக்கு யாது காரணம்? ஒரே ஒரு அணு குண்டு இத்தனைக் கொடிய செயல்களையும் செய்ததாம். இத்தன்மைய துன்பங்களை செய்தது பாவம் அல்லவா? அப் பாவச் செயல்களைச் செய்தவர்களுக்குத் தண்டனை உண்டா? கன்மவிதிக்கு இந்த பயங்கரச் செயல்கள் விலக்கு ஆகுமா? திருட்டு முதலிய சிறு குற்றங்களுக்கு இப்பிறப்பிலும், மறு பிறப்பிலும் தண்டனை கிடைக்கும் என்பர். அப்படியாயின் இத்தனைப் பெரிய பாவ காரியத்திற்கு வினைப்பயன் இல்லையா? பல்லாயிரக்கணக்கான கொலைகளுக்குக் காரணமான அணுகுண்டை உண்டாக்கின விஞ்ஞானிகள் இப்பாவத்திற்கு உடந்தையர் அல்லவா? அவர்களை வினைப்பயன் அண்

டாதா? இதற்குச் சமயநூல்கள் என்ன கூறுகின்றன? சிலர் கூறும் விடையையும் ஆராயவேண்டும்? 'போர் நீடித்திருந்தால் உயிர் அழிவு மிகுதியாகும். அவ்வழிவை நிறுத்தவேண்டி அணுகுண்டு போடப்பட்டது. அக்குண்டு கொடுமையான போதிலும் உண்மையில் நன்மைதான் செய்தது'' என்று வாதிப்பாரும் உண்டு. கன்மவினையின் தத்துவத்தை அறிந்தார்கள் இந்த விடையை ஏற்றுக்கொள்வார்களா? நன்ருக ஆராயுங்கள்.

2. அதைத் தொடர்ந்தது என்ன? ' அணுகுண்டு ஒன்றினல் உயிர்களுக்கும் பொருள்களுக்கும் கணக்கற்ற சேதம் விளைந்தது. ஆனல் நீடித்துச் சென்ற போர் நின்றது. அதுவரைக்கும் நன்மையே அல்லவா?' என்ற எதிர் வாதத்தைக் கூறினேம். போர் நின்றவுடனே அணுகுண்டின் உற்பத்தியும் நின்றிருந்தால் அவ்வெதிர்வாதம் ஒப்புக்கொள்ளக்கூடியதே. ஆனல் அந்த உற்பத்தியும் அதற்கு மேல் வேறு முயற்சிகளும்நின்றதாகத் தெரியவில்லை. அணுகுண்டிற்குப் பிறகு ஜலவாயுகுண்டு, கிருமி குண்டு முதலியவைகள் எல்லாம் செய்ய முயலுகின்றனர். நாகரீகத்தில் சிறந்த ஒரு வல்லரசு இவைகளை உண்டு பண்ணத் தொடங்கினல் மற்ற வல்லரசுகளும் அதனேடு போட்டியிட முயலுகிறார்கள் அல்லவா? குண்டுகளைச் செய்வதில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் அதன் இரகசியத்தை வெளியிடாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். வெளியிட்டால் அவர்கள் தலைக்குக் கல்தான். இதற்குக் கடுமையான விதிமுறைகள் ஏற்பட்டிருக்கின்றன. உண்மையானதும் நன்மையானதும் ஆக விஞ்ஞான ஆராய்ச்சி இருக்கும் ஆனல், அதனை எல்லோருக்கும் தெரிவிப்பது முறையல்லவா? அறிவு வளர்ச்சிக்குத் தடை எதற்கு? அதனை இரகசியமாக வைத்திருக்க வேண்டுமா? மக்கள் அறிவில் சிறந்து ஞானம் பெற்று இன்பம் துய்க்கவேண்டும் என்ருல் படிப்பில் இரகசியம் ஏன் இருக்கவேண்டும்? உள்ளுக்குள்ளே கெட்ட நோக்கம் இருந்தால் அன்றி ஒரு அறிவுச் செய்தியை எவனும் இரகசியமாக வைத்திருக்கமாட்டான். அமெரிக்கா அணுகுண்டு

செய்யும் முறையை இரகசியமாக வைத்திருப்பதே உலக நன்மைக்கு அது ஏற்பட்டதல்ல என்றும் உலகக் கேட்டிற்கே அது ஏற்பட்டது என்றும் அறியவேண்டும்.

3. நடந்த கதை என்ன ? முந்திய போரில் வெடி குண்டுகள் மட்டும் செய்யப்பட்டன. அவற்றின் நாசச் செயலோ சொல்ல முடியாதவை. ஆனால் அவைகள் போர்க் களத்தில்தான் போடப்பட்டன. உயிரைவிடத் துணிந்த போர்வீரர்களே அவைகளால் இறந்தார்கள். அவற்றினால் அமெரிக்கா திருப்தி அடையவில்லை. சங்கார மூர்த்தியின் ஆற்றல் முழுவதையும் தாமும் பெறவேண்டும் என்ற நோக்கம் கொண்டு இயற்கையை வழிபட்டார்கள். டெக்சாஸ் என்ற பாலைவனப் பிரதேசத்தில் அணுகுண்டைச் செய்து பரீட்சை பார்த்தார்கள். அது வெடித்தது. உடனே அதனை ஜப்பானில் இரண்டு ஆதரவற்ற ஊர்களின்மீது எறிந்தார்கள். அங்கு ஆண் பெண் குழந்தை முதலான நூறுயிரக் கணக்கான நிரபராதிகள் மடிந்தார்கள். அவர்களுடைய ஆசை அவ்வெற்றியுடன் நின்றதா ? மறுபடியும் பரீட்சை பார்க்கப் பசிபிக் சமுத்திரத்தில் பிக்கினி என்ற தீவின்மீது பரீட்சை செய்தார்கள். இலட்சக்கணக்கில் செலவு செய்து கட்டிய இரண்டு கப்பல்களில் பலவிதமான ஜீவசந்துக்களை ஓர் நீர் நிலையில் நிறுத்தி அவற்றின்மீது தாம் செய்த அணு குண்டை எறிந்தார்கள். அக்கப்பல்கள் தூள் தூளாயின. பல ஜந்துக்கள், கொலையுண்டன. ஆனால் சில உயிர்கள் பிழைத்திருந்தன. எத்தனை செலவு எத்தனை அழிவு ? அப்படியாகியும் அந்த பரீட்சையில் அமெரிக்கர்கள் திருப்தி அடையவில்லை. முழுநாசமும் அல்லவோ ஆகியிருக்கவேண்டும். அது அல்லவோ ருத்திராம்சப் பெருமையாகும் ? அதனைப் பெறவேண்டும் என்று மீண்டும் முயன்றார்கள். உடனே அந்த நாட்டு விஞ்ஞானிகள் மற்றொரு பயங்கரமான குண்டை உண்டுபண்ணினார்கள். அதுதான் ஜலவாயுகுண்டு. (Hydrogen Bomb) அதனை மற்றொரு தீவில் எறிந்து, பரீட்சை பார்த்தார்கள். அங்கும் பல ஜீவஜந்துக்களை வைத்திருந்தார்கள். அவைகள் எல்லாம் நாசமாயின. அக்

குண்டு வெடித்த வெடியின் ஒளி பதினைந்து கற்களுக்கப்பால் இருந்த மக்களின் கண்களைச் சிறிதுநேரம் மழுப்பி விட்டது. ஆனால் பல புது இரகசியங்களைக் கண்டுபிடித்தார்களாம். குண்டு போட்ட இடத்திற்கு விரைவாக செல்லக்கூடும் என்று கண்டுபிடிக்கபட்டதாம். என்ன கொடுமையான நாசகாரிய வித்தை ? இதுதான் அமெரிக்கா நாகரிகம்.

4. நோக்கம் யாது ? இப்பயங்கரமான போர்க்கருவிகளை உண்டு பண்ணுவதின் நோக்கம் யாது ? அவற்றை உண்டு செய்யும் அமெரிக்கர்களைக் கேட்டுப் பாருங்கள். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள். இவைகளால் கொடுந் துன்பம் விளைந்து மனித சமூகத்தை அழிப்பதல்ல எங்கள் நோக்கம் ; அப்படி அழிக்க வருபவர்களைப் பயமுறுத்தி அடக்கி வைக்கவே இவைகளை ஆயத்தப் படுத்தி வைக்கிறோம் என்கிறார்கள். போர்களுக்குக் காரணமாயிருந்த ஜெர்மானியர் ஜப்பானியர் இவர்களைக் கட்டுப்படுத்த வில்லையோ அதுபோலவே இனிமேலும் செய்ய இந்த எச்சரிக்கையைக் கொண்டுள்ளோம் என்கிறார்கள். ஓரளவில் இது உண்மையாக இருக்கக்கூடும். ஆனால் அழிவை ஒத்திட்டுப் பார்த்தால் பலன் தகுதியா ! கவனியுங்கள். இது கிடக்க. பயத்தினால் ஒருவரைக் கட்டுப்படுத்துதலினும் அன்பினால் கட்டுப்படுத்துதலே புனிதமான காரியம் அல்லவா ? திருவள்ளுவர் இதனையே போதித்திருக்கின்றார்கள் அல்லவா ? விவிலிய ஆசிரியரும் இதனையே படிப்பித்திருக்கிறார்கள் அல்லவா ? இவர்களை ஆசிரியர்களாகக் கொண்ட கிறிஸ்தவ அமெரிக்கர்களின் நோக்கம் என்ன விபரீதமாக இருக்கிறது ? இதனை ஒப்புக்கொள்ள முடியுமா ?

5. சரித்திரம் என்ன கூறுகிறது : நாட்டுச் சரித்திரத்திலும் உலக சரித்திரத்திலும் செய்திகள் மாறி மாறி வந்தபோதிலும் ஒரு காலத்தில் நடந்த செய்திகள் முன் ஒரு காலத்தில் நடந்தவைகளாக இருக்கக் காண்கிறோம். சரித்திரம் திருப்பித் திருப்பி நடைபெறுகிறது. (History repeats itself) என்ற சொற்றொடரினால் இதனைக் குறிக்

கின்றனர். ஒரு சிறந்த வீரன் பேரரசனுகிப் பல நாடுகளைப் பிடித்து எல்லாவற்றையும் அணைத்துக்கொண்டு ஆளு கிருன். பிறகு அவனுடைய சந்ததியார் அவ்வாறு ஆள முடியாமல் போகப் பல குறுநிலத் தலைவர்கள் தன்னுரிமை பெறுகிறுர்கள். முடிவில் பேர்ரசு சிதைந்துபோய்ப் பல சிறு நாடுகள் ஆகின்றன. இந்த வரலாறு உலகம் முழுதும் அடிக்கடி நடைபெறுகின்றது. மேலும், ஒரு பேரரசு நீதியோடும் அறிவோடும் ஆளுகிறது. சட்டதிட்டங்கள் வகுத்துக் கலையைப் பெருக்கி மக்களுக்கு அறிவும் நல்ல வாழ்க்கையும் தருகின்றது, அரசும் மக்களும் சுகத்தில் ஈடுபட்டு வாழ்கிறுர்கள். மற்றொரு இடத்திலிருந்து அநாகரீகர்கள் ஆன வல்லமை பொருந்திய ஒரு வகுப்பார் தோன்றிப்படையெடுத்து அப்பேரரசைக் குலைத்துச் சித்திரவதை செய்துவிட்டுத் தாமே ஆளுகிறுர்கள். இந்த வரலாறும் உரோம், இங்கிலாந்து, இந்தியா, சீனு, கொரியா, அமெரிக்கா முதலிய இடங்களில் நடந்திருக்கின்றன. அது போலவே கலைப்பெருக்கத்திலும் நடக்கிறதல்லவா ?

6. நமது புராணங்களின் கூற்று: அவுணர்கள் மூவர் இரும்பு, வெள்ளி, பொன் என்ற மூன்று உலோகங்களினுல் மூன்று கோட்டைகளை உண்டு செய்து அவைகளை ஆகாயத்தில் பறக்கச் செய்து நினைத்த நகரத்தின்மீது அவைகளைச் செலுத்தி அந்நகரத்தை அடியோடு அமிழ்த்தி அழித்துவந்தார்களாம். அக்கொடுமை சகிக்காத தேவர்கள் முறையிட இறைவன் தேரூர்ந்து அம்மூன்று கோட்டைகளையும் எரித்து மக்களைக் காப்பாற்றினுராம். பின் ஒரு காலத்தில் இரணியன் இரணியாட்சன் என்ற சகோதரர்கள் நிலத்தை அமிழ்த்தி மக்களைக் கொல்லுதல் முதலிய தீங்குகளைச் செய்யவே திருமால் வராகம் நரசிங்கம் என்ற உருவங்கள் எடுத்து அவர்களை வதைத்து மக்களைப் பாதுகாத்தாராம். மற்றொரு காலத்தில் இராவணன் முதலியோர் தோன்றி இலங்கையில் ஆண்ட தேவர்களைத் துன்புறுத்தி வந்தார்கள். அயோத்தியில் இராமன் தோன்றி அவர்களை வென்று கொன்று விபீடணனுக்கு அவ்வரசைத் தந்தாராம்.

கடலுக்கு அப்பால் வீர மகேந்திரத்தில் சூரபத்மாதியர்கள் தோன்றி தேவர்களை அழித்துச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தக் குமாரதேவர் தோன்றி அவர்களை அழித்துத் தேவர்களை மீட்டனராம். இவ்வாறான புராண சரிதங்களினால் உலகில் கொடுங்கோன்மை தோன்றுவதும், மக்கள் அதனால் படாத பாடு படுவதும், பிறகு ஒரு தெய்வீகவீரன் தோன்றிக் கொடுங்கோன்மையை அழித்துச் செங்கோன்மையை நிலை நாட்டுவதும், அடிக்கடி நடந்த செயல்கள் என்று புராண வாயிலாக அறிகிறோம்.

7. அதன் உட்பொருள்: புராணக் கதைகளை தற்காலத்து இளமைக்கூட்டம் நம்புவதில்லை. ஆனால் அவற்றில் உட்கிடக்கும் தத்துவத்தை நம்பாமல் இருக்க முடியாது. மக்களிடை செருக்கு ஏற்பட்டு அறிவை மயக்கிக் கொடுமையை விளைவித்தல் இயல்பே. செருக்கு இரண்டு காரணங்களினால் ஏற்படும். மடமையினால் தோன்றும். அறிவு மிகுதியாலும் தோன்றும். மடமையினால் தோன்றும் செருக்கு மன்னிக்கத்தக்கதே. மடமை நீங்கினால் அச்செருக்கு போய்விடும். ஆனால் அறிவின் மிகுதியால் ஏற்படும் செருக்கு பொல்லாதது. அதனை வேரோடு அழித்தல் சரியானது. திரிபுராதிகளும் சூரபத்மாதிகளும் அறிவுச் செருக்கினால் தீயவர்கள் ஆனார்கள். பொன் வெள்ளி இரும்பு முதலியவைகளால் கோட்டைகள் கட்டி அவைகளில் அமர்ந்து அவைகளைப் பறக்கவிடுதல் இயற்கை ஆற்றலே. விஞ்ஞான அறிவால் அறிந்து அதனைப் பிரயோகித்தலே ஆகும். கடலுக்கப்பால் ஒரு நகரம் அமைத்து அங்கிருந்து தேவர் உலகம்வரை பறந்து அவ்வுலகத்தார்களை அரிய சாங்களால் அடித்து வென்று சிறை கொண்டதும் விஞ்ஞான அறிவினாலேயேதான். புட்பக விமானத்தில் ஊர்ந்து பிறநாடுகளுக்குச் சென்று போர் விளைத்ததும் நிக்கும்பலையாகம் செய்ததும் அதே அறிவினால்தான். ஆகவே அறிவின் வலிமையால் கேடும் விளைவிக்கலாம் அல்லவா? அவ்வலிமையும் கொடுமை என்னும் குன்றில் ஏறப்பட்டால் அதுஒழியும் என்பது புராணங்களின் உட்கருத்து.

8. தற்கால விஞ்ஞான முறைகள் : நீரிலும் ஆகாயத்திலும்வலுவான பீரங்கிகளை ஏற்றிச்செல்லும் நாசகாரியக் கோட்டைகள் யாவை? கடலுக்குள் மூழ்கிப் பெரும் கப்பல்களைத் துளைத்து அழிக்கும் பயங்கரமான நீர் மூழ்கிகள் யாவை. வானத்தில் பறந்து போர்வீரர்களைக் குடைகளின் மூலம் இறக்கி போர்புரியச் செய்யும் வானவூர்திகள் யாவை? வானத்தில் இருந்து குண்டுகளை எறிந்து பெரிய நகரங்களையும்அழிக்கும் போர்க்கருவிகள் யாவை? நிலத்தின் வயிற்றைக் கீறி உள்ளே புகுந்து சுரங்கங்களின் வழியே நிலத்தை வெடிக்கச் செய்வது எது ? வெடிமருந்து மின்னல் வெடி பிராணவாயுநீர் இவைகளால் பெரும் குன்றுகளையும் தகர்த்துவிடும் முறைகள் யாவை ? இரவைப் பகல் போலச் செய்து கூத்துக் களியாட்டங்கள் இழைத்து பழங்களினுல் மதுபானங்களை விளைவித்துமக்களை உண்ணச்செய்து களிப்பித்து அவர்களை மதோன்மத்தர்கள் ஆக்குவது எது ? இவ்விதமான கணக்கற்ற வியப்புச் செயல்களை விஞ்ஞான அறிவே செய்திருக்கின்றதல்லவா ? அதனுல் மனிதன் இன்பம் அடைகின்ருன் என்ற கருத்து கூறப்படுகின்றது. ஆனுல் உண்மையை ஆராய்ந்து பார்க்கும்போது இன்பத்தின் பெயராலே துன்பமே மிகுதியாக விளைகிறது என்று சொன்னுல் அது மிகையாகுமா ?

9. பண்டை முறைகளுக்கு ஒற்றுமை: ஒரு கத்தியால் ஒரு எழுதுகோலைத் தீட்டலாம். அதை எடுத்து ஒரு ஆளைக் குத்தவும் செய்யலாம். ஒன்று நன்மை ஒன்று தீமை. அதுபோல இயற்கை ஆற்றல்களை நல்ல வழிக்கும் பயன் படுத்தலாம், தீயவழிக்கும் உட்படுத்தலாம். அவ்வாற்றல்களினுல் இயக்கும் கருவிகளையும் அதுபோலவே இரண்டு எதிர்த்து நிற்கும் செயல்களுக்கும் பயன் படுத்தலாம். இவ்விரண்டிலும் மனிதன் எதனைச் செய்யவேண்டும். மனிதனுக்கே பகுத்தறிவு உண்டு. அப்பகுத்தறிவினுல் நன்மை தீமைகளை அவன் அறியமுடியும். அவன் தீமையை விடுத்து நன்மையைப் போற்றுதலே சரியானது. அதற்கு உரிய கருவிகளையே அவன் உண்டாக்கிப் பயன் படுத்தல் நல்

லது. அப்படியின்றித் திரிபுராதிகளும் சூரபத்மாதிகளும் இராவணுதியரும் நல்லதை ஒழித்துத் தீயவை கொண்டார் கள். தமது கல்வியாற்றல்கள் எல்லாம் தீமை செய்யும் கருவிகளுக்கே பிரயோகித்தார்கள். அந்த மாறுபாட்டுச் செயலினுல் தாமே அழிந்தார்கள். அது புராணகாலப் பேச்சு. தற்போது என்ன ஏற்படுகிறது. அமெரிக்கர்களும் ருஷியர்களும் இயற்கை ஆற்றல்களைக் கண்டுபிடித்து அவை களைக் கொண்டு பயங்கரமான கருவிகளை உண்டு பண்ணி அவைகளை நன்மைக்கு உபயோகப்படுத்தாது தீமைக்கே உபயோகிக்கிருர்கள். நிலத்தில் அன்புக்கு மாருக அழுக் காறு நிலவுகின்றது. தெளிவுக்கு மாருக பயங்கரமே தோன்றுகின்றது. இந்தத் தீய குணங்கள் எப்போது மறைந்து தொலைந்து போமோ என்று மக்கள் கூக்குரல் இடுகிருர்கள். பண்டைத் திரிபுராதிகளுக்கு ஏற்பட்ட முடிவு தற்காலத் திரிபுராதிகளுக்கு ஏற்படாதா என்பதே பொது மக்கள் மனதில் தோன்றும் வருங்காலத்தின் கருத்தாகும்.

10. பகுத்தறிவின் பயன் : பகுத்தறிவு என்ற சொல் தற்காலத்தில் எல்லா மேடைகளிலும் அடிபடுகின்றது. அத னுடைய உண்மைக் கருத்து எது என்று யார் ஆராய்ந்தார் கள். தற்கால இளமை உலகம் அதன் உண்மைப் பொருளை அறிந்ததோ என்பது கேள்வி? மேற்கு நாடுகளில் விளைந்த விஞ்ஞானப் பெருக்கை நோக்கி நமக்கும் அவைகள் கிடைத் தால் அவைகளால் இன்பமும் பெருமையும் அடையலாம் என்று அவ்வுலகம் ஏங்குகிறது. அவ்வாறே ஜப்பானியர் கள் ஏங்கினர்கள். அவைகளைப் பெற்றுர்கள். ஆனல் போரில் தோற்று அடிமைப்பட்டிருக்கிருர்கள். நம் நாட் டாரும் அவ்வாறே ஆகவேண்டுமா? விஞ்ஞான முயற்சி களால் இன்பம் இறுதியாக அடைய முடியுமா என்பது ஒரு கேள்வி. பகுத்தறிவினுல் இன்பம் அடைய முடியும் என்று சொல்ல முடியும். எந்த பகுத்தறிவு என்ற கேள்வி. விவேகம் என்ற பகுத்தறிவினுல் என்பது விடை. அது தான் நித்தியம், அநித்தியம், நிண்ணயம், தெரி விவேகம் என்று கூறினர் முன்னேர். இது மெய், இது பொய். இது

நிலைத்தது, இது நிலையாதது என்று பாகுபடுத்தும் அறிவே பகுத்தறிவாகும். அதனுடையஉதவியால் இன்பம் பெறலாம். ஆனால் விஞ்ஞானம் உண்டு செய்யும் செருக்கோ அந்த அறிவை மழுக்குகிறது. அந்தச் செருக்கு ஏற்படாமல் அழிக்கவேண்டும். அப்போதுதான் பகுத்தறிவு பயன்படும். அதனை இளமை உலகம் அறிந்து போற்றவேண்டும். மேற்கு நாட்டார் அதனை அறியும் மனப்பான்மை இல்லாதவர்கள் கீழ்நாட்டார்களோ அதனை அறியும் மனப்பான்மை உள்ளவர்கள். ஆகவே, இந்த உயரிய கருத்தை ஆராய்ந்து நமது வாழ்க்கையை மேம்படுத்துவோமாக.

---

2. தலப்பகுதி

பூம்புகாரும் திருக்கேதிச்சரமும்

(ம. ரா.)

'செந்தமிழ்ச் செல்வி'யில் சென்ற திங்கள் வெளியீட்டில் காவிரிப்பூம் பட்டினத்தைப்பற்றி ஓர் அருமையான கட்டுரை வெளிவந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் கண்ட அரிய குறிப்புக்களைக் கொண்டு கட்டுரை ஆசிரியர் ஆராய்ச்சி முறையில் அந்நாள் அத்தலைநகர் எவ்வாறு அமைந்திருக்கும் என்று ஆய்ந்து விவரித்திருக்கின்றார். அதில் தன் ஆராய்ச்சிகளை விளக்க ஒருபடமும் வரைந்திருக்கின்றார். அப்படம் இன்னமும் தெளிவாகவும் பெரிதாகவும் வரைந்திருந்தால் மிகவும் அழகாகவும் பயன் தரத்தக்கதாகவும் இருந்திருக்கும்.

கட்டுரைக்குச் சேர்த்தியுள்ள படம் இயற்கை பமைப்பை ஒட்டி வரைந்திருத்தலே சரியானது. தற்போது காவிரிப்பூம்பட்டினம் எவ்வாறு உள்ளது என்பதற்கும் முற்காலத்தில் எவ்வாறு இருந்திருக்கக் கூடும் என்பதற்கும் தற்போதைய நில அமைப்பைக்காண வேண்டும். நிலத்தைத் தோண்டி அதில் புதைந்துள்ள பொருள்களை

ஆராய்ந்து அவைகள் கிடைக்கும் நிலைமை முதலியவை களைக் கண்டு வரைவதே தகுதியான முறையாகும்.

இம்முறை மேல் நாடுகளில் புதைபொருள் ஆராய்ச்சிக் கழகத்தாரால் (archeological department) கையாளப் பட்டு வருகின்றது. நமது தமிழ்நாட்டில் இன்னமும் அவ் வித ஆராய்ச்சி தோன்றவில்லை. விரைவில் தோன்றினால் கலைவளர்ச்சிக்கு மிகுந்த பயன் கிடைக்கும்.

அண்மையிலே இலங்கை சென்றிருந்தேன். அங்கே உள்ள திருக்கேதீச்சரம் என்ற பாடல்பெற்ற தலத்தைத் தரிசிக்கச் சென்றேன். அங்கே இப்போதுள்ள கோயில் ஒரு நூற்றாண்டுக்குள் கட்டப்பட்டது. பழைய கோயில் நான்கு நூற்றாண்டுகளுக்குமுன் போர்த்துகீசியர் என்ற பரங்கியால் அழிக்கப்பட்டது. அது இருந்த இடம் தெரியாமல் இருந் தது. நகரத்துப் பெருமக்கள் சமயத் திருப்பணியில் ஈடு பட்டுத் திகழ்ந்த நாளில் திருக்கேதீச்சரத்தையும் புனர் உத்தாரணம் செய்ய நினைத்தார்கள். பலநாள் தேடிப் பார்த்ததில் பல குறிப்புக்களை ஆராய்ந்து இப்போது கோவில் கட்டியிருக்கும் இடத்தில் ஒரு இலிங்கம் இருக்கக் கண்டு அங்கே ஒரு சிறு கோயில் கட்டினார்கள். அதுதான் இப்போது வழங்கப்பெறுவது. அந்தக் கோயிலும் நாளா வட்டத்தில் பழுதுபடவே அதனைச் சீரணோத்தாரணம் செய்ய யாழ்ப்பாணத்துப் பெருமக்கள் முயற்சி செய்து வருகிறார்கள். அந்த நிலையில் சரியான இடம் கண்டு பிடிக்க முயலுகையில் இலங்கை அரசியலார் அதில் அக் கறை எடுத்துக்கொண்டு அவ்விடத்தைச்சோதிக்கும்படி கட் டளை இட்டார்கள். புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதியார் அதில் வேலை செய்யத் தொடங்கியுள்ளார்கள். தற்போது அந்தப் பகுதியில் அலுவல் பார்க்கும் திரு. சண்முகநாதன் என்ற கலை வல்லவர் அப்பணியில் ஈடுபட்டுள்ளார்கள். யாழ்ப்பாணத் தமிழ் விழாவிற்குச் சென்ற நான் அந்தப் பணியைக் காணச் சென்றபோது அன்னார் எனக்கு நாளது வரை செய்துள்ள வேலையை விவரித்துக் காட்டினார்கள். தோண்டின இடங்களில் கிணறுகள், கட்டிடங்கள், சிவலிங்

கங்கள் முதலியன காணப்பட்டன. வெளியே எடுத்த புதை பொருள்களை ஒழுங்காக வைத்து உள்ளார்கள். அவைகளிலே 1008 சங்குகள் இருந்தன. இவைகள் சங்காபிஷேகத்திற்கு உபயோகப்பட் டிருந்தவைகள் என்று எளிதில் அறியலாம். மேலும் மண்பாத்திரங்கள், பளபளப்புப் பாத்திரங்கள் முதலியவைகளும் இருக்கின்றன. உடைந்த பொருள்களில் சீனு, இந்துசீனு, கிழக்குத் தீவுகள் முதலியவைகளில் உற்பத்தியாகும் பொருள்கள் இருக்கின்றன. இலங்கையை நோக்குமிடத்து அந்நாளில் திருக்கேதீச்சரம் உள்ள மாந்தை நகரம் மிகப் பெரிதாக இருந்திருக்கவேண்டும் என்றும் அந்நகரம் சீனு, இந்துசீனு, கிழக்குத் தீவுகள் இவைகளோடு வாணிபம் செய்திருக்கவேண்டும் என்றும் தெரிகிறது. மற்றும் இந்தத் தலம் 1008 சங்குகளால் ஆராதிக்கப் பெற்ற ஒரு பெரிய புனிதத்தலமாகவும் இருக்கக் கூடும் என்றும் அறிய இடம் இருக்கிறது. இன்னும் வேலை முழுவதும் செய்தபிறகு வெகு அரிய செய்திகள் தோன்றலாம்.

இவ்வாறு இலங்கையிலே புதைபொருள்கள் பகுதி (Arch Dept.) வேலை செய்து கொண்டிருக்க நமது தமிழ் நாட்டிலே என்ன நடந்திருக்கிறது என்று கேட்டால் வெட்கக்கேடாக இருக்கும் அல்லவா ? வெகு ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலியில் நடந்த ஓர் ஆராய்ச்சியும் சமீபத்தில் அரிக்கமேட்டில் நடக்கும் ஆராய்ச்சியும் தவிர வேறு எங்கே ஆராய்ச்சிகள் நடந்தன ? ஆராய்ச்சி இடங்கள் கணக்கின்றி இருக்கின்றன. அவைகளை ஆராய்ச்சிப்பகுதியார் அறிவார்கள். ஆனால் வேலை செய்யவில்லை. இவ்வித ஆராய்ச்சிக்கு ஏற்ற இடம் பூம்புகார்ப் பகுதி ஆகும். இங்கே எவரும் எதுவும் செய்யவில்லை. சிலப்பதிகாரம்தான் பழைய கதை பாடுகிறது. அதன் உண்மையை ஆராய்வது விஞ்ஞானக் கலையினர் பொறுப்பும் கடமையும் ஆகும் அல்லவா ? அண்மையிலே அப்புகாரிலே சிலப்பதிகார மாநாடு நடைபெற்றது. இதனை ஒட்டி ஆராய்ச்சி செய்யும்படிக்கு நடவடிக்கைகள் எடுக்கும்படி தீர்மானம் செய்வதே நல்லது.

திருநெல்வேலி வட்டத்தில் கொற்கையில் ஆராய்ச்சி செய்வதாக ஏற்பாடு ஆகியிருக்கிறதாம். அதோடு நில்லாமல் பூம்புகாரிலும் ஆராய்ச்சி செய்வதே சரியானது. ஏனெனில் புகார் சைவத்திற்குப் புனிதமான இடம். அங்கேதான் திருச்சாய்க்காடும் பட்டினத்துப் பல்லவனீச்சரமும் உள்ள பெருமை உண்டு. பட்டினத்தடிகள் அவதரித்த இடம். ஆகவே சைவத்திற்கும் இந்த ஆராய்ச்சி பெரும் பலன் தரும். 2000 ஆண்டு கழித்து இந்திரவிழா நடத்தப் போகின்றார்களாம். இந்த விழாவைவிட ஆராய்ச்சி உணர்ச்சியே மேன்மையானது அல்லவா?

---

3. சமயப்பகுதி

வேண்டுதலை

அண்மையிலேயே ஈழநாடு சென்றபோது மிகக் கோரமான சில செயல்களைக் கண்ணுற்று வருந்தினேன். தெய்வங்களுக்கு வேண்டுதலை செய்துகொண்டு தம் கோரிக்கை அடைந்த பிறகு அவ்வேண்டுதலை நிறைவேற்றித் தருவதில் அவைகளைக் கண்டேன். உடம்பை வருத்திக் கொள்வதிலே அவ்வேண்டுதலை இருந்தது. இந்திய நாட்டிலே அத்தன்மையான கோரச்செயல்கள் இப்போது தடுக்கப்பட்டிருக்கின்றன. அலகு குத்தல், தேர் இழுத்தல் முதலியவை இப்போது நின்று விட்டன. திருப்பதியில் மட்டும் இன்னும் ஒன்றிரண்டு பழக்கங்கள் இன்றைக்கும் நடைபெறுகின்றன. நாக்கில் ஊசி போடுதல், கன்னத்தில் ஊசி குத்திக்கொள்ளுதல் என்றவை நடைபெறுகின்றன. நெருப்பின்மேல் நடத்தல் இன்னும் நிற்கவில்லை காவடி எடுத்தல் முதலியவை சாதாரணம். அதனுல் உடலுக்கு யாதொரு தீங்கும் வருத்தமும் ஏற்படாது. வருத்தம் ஏற்படக்கூடிய வழக்கங்கள் முற்றும் தொலைந்தன. தஞ்சை ஜில்லா வீரசிங்கம் பேட்டைக் கலகத்திற்குப் பிறகு இவ்விதக் கொடிய

பழக்கங்கள் அனேகமாக நின்று விட்டன. ஆனல் ஈழ நாட்டிலே அவைகளைப் பற்றி இன்னும் அரசியல் சட்டம் ஏற்படவில்லை. ஆகவே அத்தன்மைய செய்கைகள் இப்போதும் நடைபெறுகின்றன.

யாழ்ப்பாணச்சரகத்திலே வடமராட்சிப் பிரிவில் செல்லச் சந்நிதி என்ற ஒரு பெயர் பெற்ற கோயில் உண்டு. அது முருகன் சந்நிதி. ஆயிரக்கணக்கான மக்கள் இன்றைக்கும் அங்கே வேண்டுதலை செலுத்துகிறுர்கள். பலபேர் நாள் கணக்காக அங்கே தவம் கிடப்பது உண்டு. சங்கரநயினுர் கோயிலில் ஆடித்தவசு நாளில் தவம் கிடப்பது போல இங்கும் தவம் கிடப்பது உண்டு. நான் சென்றது ஒரு வெள்ளிக்கிழமை. அன்று ஒரு தேர்த் திருவிழா போல மக்கள் கூடியிருந்தார்கள். கோயில் தொண்டைமான் ஆற்றங்கரையில் இருக்கிறது. கோயில் சிறியதுதான். அதைச் சுற்றிலும் பெரிய வெட்டவெளியும் மரங்களின் நிழலும் உண்டு. அங்கே அனேக பண்டக் கடைகள் வைத்திருந்தார்கள். பிரார்த்தனைக்காரர்கள் கூட்டம் மிகுதியும் இருந்தது. தூபதீபங்கள் ஆராதனை மிகுதியாக இருந்தது. பகல் வேளை கடுமையான வெய்யில் அடித்தது. ஒரு குடும்பத்தார்கள் வேண்டுதலை நிறைவேற்றிக்கொண் டிருந்தார்கள். ஆடவனும் பெண்பாலும் வாய்ப்பூட்டு இட்டுக்கொண்டு வந்தார்கள். அவர்கள் தள்ளாடிக் கொண்டு நடந்தார்கள். சிலர் அவர்களைத் தாங்கிக்கொண்டு நடந்தார்கள். வேண்டுதலைக்காரர்கள் அவ்வாறு தாங்கள் வேண்டிக்கொண்டுக் கோயிலை வலம் வந்து சந்நிதியில் நின்றுர்கள். அப்போது வாய் பூட்டுகள் வாங்கப்பட்டன. இரத்தம் மிகுதியாக வந்தது. திருநீறு இட்டு இரத்தத்தை அமுக்கினுர்கள். இரத்தம் நின்றது. ஆண்பால் சகித்துக் கொண்டான். பெண்பால் சகிக்கமுடியாமல் சாய்ந்தாள். மற்றப் பெண்கள் தாங்கிக்கொண்டார்கள். வருத்தத்தைக் கண்டு ஆறுதல் கூறிச் சிரித்தார்கள். பிறகு சிறிது தெளிந்தவுடன் தீர்த்தமும் பானமும் தரப்பட்டன. பிறகு அவள் எழுந்து உட்கார்ந்தாள். இந்தச் சம்பவத்தைக் காண என்

கண் சகிக்கவில்லை. முதலில் அலகுகளைக் குத்தும்போது எப்படி இருந்ததோ அறியேன்.

கன்னத்தின் இருபுறமும் இரண்டு வெள்ளி நாகங்கள் வாயிலிருந்து வெளியே ஒரு வெள்ளி நாகன் மாட்டப் பட்டிருந்தன. நாகர் படம் ஓர் அங்குலம் இருக்கும். கன்னமோ குத்தப்பட்டு அதில் வெள்ளிக் கம்பி கோக்கப் பட்டிருந்தது. வாயிலிருந்த நாகன் நாக்கில் குத்தப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். இல்லாவிடில் அது எப்படி நிற்கும். தவிர கழுத்து, கன்னம், கண்களுக்கு இடைவெளி, பிறகு நெற்றி இவைகளின் வழியே 7, 8. அங்குலம் நீளமாக ஒரு நுண்ணிய கம்பி நுழைக்கப்பட் டிருந்தது. இது என்ன நோன்போ தெரியவில்லை. ஒருவேளை வாதம் வந்து சௌக்கியமானதினால் இப்படி ஏற்பட்டதோ அறியேன். அதனை எடுக்கும் போது நெடுக இரத்தம் சொட்டிக் கொண்டு இருந்தது. அதற்கும் திருநீறு இட்டே நிறுத்தினார்கள். இவ்விதக் கோரமான வேண்டுதலை மிகவும் அபாயமானது அல்லவா? ஆகவே அளவுக்கு மீறின நம்பிக்கை இருந்ததினால்தான் அதையெல்லாம் பொறுத்துக்கொண்டு வேண்டுதலையை நிறைவேற்றினார்கள் போலும்.

இந்த வேண்டுதலைப் பார்க்கவே சகிக்கவில்லை. வேண்டுதலை நிறைவேற்றின அப் பெண்பாலுக்கு எப்படி இருக்குமோ? திருப்பதியிலிருந்து பாபநாசம் செல்லும் போது பலவித வேடிக்கையான தவ நிலைகளைக் கண்டேன். கன்னம் நாக்கு இவைகளில் நாராசம் ஏற்றி இருப்பது மட்டுமன்று; தலைகீழ் நிற்பது, கைகளைப் பின்னால் சேர்த்திக் கொண்டு அசைவின்றியிருப்பது, ஒற்றைக் காலில் நிற்பது, முதலியவைகளைக் கண்டேன். பெரியவர்களே அன்றிச் சிறுபிள்ளைகளும் பெண்பாலரும் தவம் கோருகிறார்கள். இவர்கள் காசுக்காகச் செய்வதே இந்தத் தவம். ஒரு பையனைப் படுக்கவைத்து முகத்தின் பேரில் மண்கொட்டி மூடுவது ஒரு விசித்திரமான தவம். அவன் எப்படி மூச்சுவிடுவானோ அறியோம். திருப்பதிக் கோயிலை அங்கப் பிரதிட்சணம் செய்ய உருண்டு செல்லுதல் என்ன

தவமோ இதனை பிராமணப் பெண்களும் செய்கிறார்கள். பெரியபாளையத்தில் நிர்வாணமாக வேப்பிலையைச் சுற்றிக் கொண்டு பிரதிட்சணம் செல்லுதல் மிக ஆபாசமான செயல் ஆகும். இப்படிப்பட்ட ஆபாசமான வேண்டுதலை சரியென்று சொல்வோர்கள் படித்தவர்களிலும் இருந்தால் அது என்ன நாகரீகமோ ?

இனிக் கதிர்காமத்தில் ஆடிமாதத்தில் இவைகள் எல்லாவற்றில் கோரமான தவங்கள் செய்யப்படுகின்றன வாம். கணக்கற்ற ஊசிகள் உடம்பில் ஏற்றிக்கொண்டு தேர் இழுப்பதும் கையில் நெருப்புச் சட்டி எடுத்துச் செல்வதும் முதலிய கோர சம்பவங்கள் உண்டாம். ஆனால் ஒரு கேள்வி. இவைகளை ஆப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும்கண்டால் ஆட்சேபனை இல்லை. நாகரீக இந்தியாவிலும் இலங்கை யிலும் கண்டால் அரக்கர் பழக்கம் என்றல்லவோ கூறவேண் டும். இவைகளைச் செய்வதினால் உடலுக்கோ உயிருக்கோ யாதேனும் ஒரு நன்மை உண்டா ? குணத் தேர்தல் உண்டா ? புண்ணியம் கிட்டுமா ? இதனை நன்கு ஆராய்ந்து இவைகளை விட்டு ஒழிப்பதே நன்று என்று தோன்ற வில்லையா ? தமிழர்களே யோசியுங்கள். தப்பானால் உடனே ஒழித்துவிடுங்கள். மூதாட்டியார் "வேண்டி வினை செயேல்" என்று கூறினது ஏன் ? ஒரு விருப்பத்தை முன்னிட்டுத் தன்னலத்தைக் கோரி அது கிடைத்தால் அதற்குப் பிரதி செய்வது சரியா ? இந்த முறை கூடவே கூடாது என்று சங்கத்து நற்புலவர்கள் கூறவில்லையா ?

சடங்குகள்

மனிதன் ஒரு பெண்ணின் கர்ப்பத்தில் தோன்றினது முதல் கொண்டு அவன் செத்துச் சுடுகாடு செல்லும் வரை யில் சடங்குகள் நடைபெறுகின்றன. இச்சடங்குகள் பல சமயங்களில் பலவேறுவிதங்களாக இருக்கின்றன. இவைகள் எல்லா நாடுகளிலும் எல்லா காலங்களிலும் இருந்திருக்கின்

றன. இவைகள் காட்டு மிராண்டிகளிடமோ உண்டு. நாக ரீகம் பெற்ற மக்களிடமும் உண்டு. பகுத்தறிவும் கல்வியும் மிகுதி ஆக ஆக சடங்குகளின் ஆற்றல் குறைந்து வரும். தொடக்கத்தில் சில கருத்துக்களுடன் தொடங்கின சடங்கு கள் நாளா வட்டத்தில் அக்கருத்துக்கள் மறைந்துபோய் மூடக் கொள்கைகளாக மாறிவிடுகின்றன. ஆனால் மக்கள் இயல்பு என்னவெனில் பயனற்ற சடங்குகளையும் கைவிடா மல் நடத்தி வருவதே ஆகும். ஆப்பிரிக்காக் காட்டாட்களை ஏளனம் செய்கிறோம். ஆனால் நாகரீகம் பெற்ற கிறிஸ்த வர்களிலும் எத்தனை அர்த்தமற்ற சடங்குகள் இருக்கின் றன. இக்காலத்திலும் ரொட்டியும் திராட்சரசமும் மாமிச மும் இரத்தமுமாக மாறுகிறது என்று எத்தனையோ கோடி மக்கள் நம்புகிறார்கள் அல்லவா ? கிறிஸ்துவர்களிலேயே இவ்வாறானால் முகமதியர்களிலும் இந்துக்களிலும் சொல்ல வேண்டுமா ? இந்துக்களின் வாழ்க்கையே சடங்குகளின் மூட்டை என்று சொன்னால் மிகை அல்ல.

வைதிகக் கொள்கைகளில் ஈடுபட்டவர்கள் சடங்கு களையே பிரதானமாகக்கொண்டு அவற்றைப் போற்றாதார் களை நாத்திகர்கள் என்று கூறுகிறார்கள். சடங்குகளில் ஏதாவது உண்மைப் பலன் உண்டா என்று அவர்கள் ஆராய்வதில்லை. உண்மையாக ஆராயும்போது சடங்கு களில் உண்மைநிலை இல்லை என்று அறியவேண்டும். உண் மைத் தத்துவங்களை அவைகள் மறைத்துப் பொய்த் தத்து வங்களை அவைகள் ஆட்கொள்ளுகின்றன. சடங்குகளை விடவே கூடாது என்று சிலர் சொல்ல சடங்குகளே வேண் டாம் என்று வேறு சிலர் சொல்லுகிறார்கள். ஆகவே தற் காலத்தில் இவ்விரண்டு கொள்கையினருக்கும் இடையே பெரிய பிளவு ஏற்பட்டுவிட்டது. இப்பிளவினால் உலகில் அவ்வப்போது அமைதியின்மையும் அதனால் பெரும் கலகங் களும் கொடிய செயல்களும் ஏற்பட்டிருக்கின்றன.

மேற்கே யூதேயாவில் இரண்டாயிரம் ஆண்டுகளின் போது யூதர்களிடை மதத்திலே சடங்குகளே முக்கிய மாக இருந்தன. மதத்தின் தூய்மையை அச்சடங்குகளை

மறைத்துவிட்டன. அப்போது இயேசுநாதர் தோன்றி சடங்குகளை வெறுத்துத் தூய கொள்கைகளைப் புகுத்தினர். பழைய கொள்கையினர் இந்த உணர்ச்சியைப் புரட்சி என்று தள்ளினர். அதனை வேரோடு பறித்து நசுக்க முயன்றனர். அதற்காக அந்தப் போதகரைச் சிலுவையில் அறைந்து அவருடைய சீடர்களைக் கருவறுத்தனர். அந்தக் கொடுமையே புதுக்கொள்கையைப் பரப்பிற்று. சில நூற்றுண்டுகள் புதுக்கொள்கைகள் ஓங்கி வளர்ந்தன.

அரேபியாவிலே 13 நூற்றுண்டுகளுக்குமுன் நாடெங்கும் சடங்குகளே சிறந்திருந்தன. உருவ வழிபாடு மிகவும் சீர் கெட்டிருந்தது. பெண்குழந்தைகளை உயிரோடுபுதைத்தனர். பெண்களுக்கு உரிமை தரவில்லை. இவைகளை முகமது நபி தடுத்தார். தூய்மையான சமயக் கொள்கைகளை நிலைநிறுத்தினர். அத்துடன் அவர்மீது போர் செய்தார்கள். ஆனல் அவர் வெற்றி பெற்ருர். அவருடைய உறவினர் பலர் கொலையுண்டார்கள். இது ஒரு புரட்சி. தென் இந்தியாவிலே 1300 ஆண்டுகளுக்கு முன் பௌத்தமும் சமணமும் சடங்குகளில் ஈடுபட்டன, தவத்தின் பெயரால் புதுச் சடங்குகளைப் புகுத்திக்கொண்டனர். தலைமயிர் பிடுங்குவது, அம்மணத்தோடு திரிவது, வெய்யிலில் நிற்பது, கையில் உண்பது முதலிய சடங்குகள் புகுந்தன. அப்பரும் சம்பந்தரும் தோன்றி அவைகளை மறுத்தனர். அப்பர் இம்சிக்கப்பட்டார். இறுதியில் அவர் வெற்றி யடைந்தார். சமணர் சம்பந்தர் மாளிகைக்கு தீ இட்டார்கள். சம்பந்தர் தப்பினர். அதனல் சமணர்கள் கழுவேறினர்கள். இவ்விதப் பெரிய கொடுமைகள் நடந்தன. இவைகள் எல்லாம் எதனைக் காட்டுகின்றன? சடங்குகளின் நிலையாமையையும் அதனல் உறும் கேடுகளையுமே தோற்றுவிக்கின்றன.

இவ்விதமாகச் சடங்குகள் சீர்கெட்டு மக்களின் தூய்மை போக்குவதும் மனிதர்கள் சடங்குகளுக்கு அடிமைப்பட்டுச் சீர்கெடுவதும் உலகில் எல்லா நாடுகளிலும் நடைபெறும் செய்திகளாகும். அவ்வாறு ஆகும் சீர்கேடுகள் அளவிற்கு மிஞ்சினல் புரட்சிகள் ஏற்படும். சில பெரியார்கள் தோன்றிச்

சீர்திருத்த முயலுவார்கள். அப்பெரியார்கள் அச்செயல்களினுல் தூற்றப்படுவார்கள். ஆனுல் அவர்கள் அடையும் துன்பங்களும் கொடுமைகளுமே மக்களைத் தூயவர்கள் ஆக்கிவிடும். அப்படிப்பட்ட ஒரு காலம் நமது நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கிறது அல்லவா ?

அரசியலில் மிக்கக் கேடுகள் ஏற்பட்டு அவற்றை நீக்கக் கருதி காந்தி அடிகள் வருத்தப்பட்டார். முடிவில் உயிரும் தந்தார். மக்கள் அழுதார்கள். உரிமைகளும் பெற்ருர்கள். அவ்வுரிமைகள் விட்டுப் போகாமல் நிலைப்பதற்கு வேறு சிலர் உயிர் கொடுக்க வேண்டும் போலத் தோன்றுகிறது. இனி சமயச் செய்திகளிலும் சமூகச் செய்திகளிலும் அன்னுரே சடங்குகளின் கொடுமைச் செயல்களிலிருந்து மக்களை விடுவிக்க முயன்ருர். வெற்றி யடைந்ததாகத் தெரியவில்லை. சிறிது வெற்றி கண்டோம். முழுவெற்றியும் கிடைக்கவில்லை.

சமயச் சடங்குகளின் சீர்கேட்டை அழிக்கச் சென்ற ஒரு நூற்ருண்டாகவே பல பெரியார்கள் முயற்சி செய்தார்கள். வங்காளத்தில் இராம்மோகன்ராயர், இராமகிருஷ்ணர், இரவீந்தரநாத டாகூரும், பஞ்சாபில் தயாநந்தரும், பம்பாயில் இராணடே, கோகலேயும், சென்னையில் இராமலிங்கரும், பாரதியாரும் மிக முயன்றனர். ஆனுல் போதுமான வெற்றி இன்னமும் வரவில்லை. பிறந்தது முதல் சாவு மட்டும் வாழ்க்கையைப் பிணைத்துள்ள சடங்குக் கொடுமைகளை சீர்திருத்தி மனிதர்களை மனிதர்களாக்குவது சுலபமா? சடங்குகளையே உண்மைச் சமயம் என்று எண்ணுகிறவர்கள் பொன் விலங்குகளை நகைகள் என்று எண்ணும் பெண்களைப்போல்வர். கோயிலுக்குள் நுழையாதபடி கழுத்தில்கட்டும் முக்கோணத்தை அழகு என்று எண்ணும் ஆட்டைப் போன்றவர்கள். மேலும் இவர்கள் காலுக்குக் கட்டும் நொண்டிக்கட்டை அலங்காரம் என்று எண்ணும் மாட்டைப் போன்றவர்கள். இவர்கள் இனி உண்மை யாது என்று கண்டு அந்தப் பிடிப்புக்களிலிருந்து விடுதலை பெறுவார்களாக !

சமூகமும் சமயமும்

(அழகுமதியன்)

1. வேறுபாட்டு நிலை: பண்டைக்காலத்தில் சமூகமும் சமயமும் வேறுபட்டு இருக்கவில்லை. எந்த நாட்டை எடுத்துப் பார்த்தாலும் அங்கே மக்கட் சமூகம் யாதாவது ஒரு சமயத்தில் ஈடுபட்டே இருந்தது. சமூகத்திற்கு ஏற்படுத்தியிருந்த விதிகள் சமயத்தை ஒட்டியே இருந்தன. நூல்களிலும் சமூகத்தையும் சமயத்தையும் பிரிவுபடுத்தி எழுதியிருக்கவில்லை. தமிழ் நாட்டில் மன்னவன் சமூக அதிகாரத்தையும் சமய ஒழுக்கத்தையும் வேறு படுத்தாது ஒன்ருகவே போற்றி வந்தான். வடநாட்டிலும் ஒவ்வொரு பிரிவினையிலும் அந்த ஒற்றுமைப்பாடே இருந்துவந்தது. மன்னவன் எந்த சமயத்தைத் தழுவினுனே அதையே மக்களும் தழுவினுர்கள். வைதிகம், பௌத்தம், சமணம் முதலியவைகள் அரசனுடைய சமயமாய் இருக்கையில் மக்களும் அவைகளையே போற்றி வந்தார்கள். மேற்கு நாடுகளிலும் கூட அரசன் சமூகத்திற்கு விதிகளை ஏற்படுத்தும்போது சமய விதிகளையும் காத்துவந்தான். ஐரோப்பாவில் சென்ற $1\frac{1}{2}$ நூற்ருண்டுகளுக்குமுன் எல்லா நாடுகளிலும் அரசுக்கும் சமயத்திற்கும் சம்பந்தம் இருந்துவந்தது. முதல் முதலாக பிரஞ்சு நாட்டில் தோன்றிய புரட்சியின்போதுதான், அரசாட்சிக்கும் சமயத்திற்கும் பிரிவினை ஏற்பட்டது. பிறகு பல குடியரசுகளிலும் அதே விதமாக அரசியல் வேறு, சமயம் வேறு என்று ஆக்கப்பட்டது. ருஷியா முதலிய பொது உடைமை நாடுகளில் சமயம் அரசியலில் இருந்து பிரிக்கப்பட்டது. இப்போது இங்கிலாந்தில் அரசு சமயத்தைப் போற்றுகிறது. அரசன் தன் சமயத்தை விட்டுவிட்டால் அரசையும்விட வேண்டியதுதான். ஆனுல் ருஷியாவோ சமயத்தைப் போற்றவில்லை. இஸ்லாம் நாடுகளில் பாகிஸ்தான் இஸ்லாம் சமயத்தைப்போற்றுகிறது. துருக்கியோ அதனைப் போற்றவில்லை. நமது பாதகண்டத்தில் சமீபகாலம் வரை

நாட்டு மன்னர்கள் சமயங்களைப் போற்றிவந்தார்கள். ஆனால் தற்போது பாரத அரசாங்கம் சமயத்தைப் போற்றவில்லை. அது சமய சார்பு இல்லாத அரசாங்கம் ஆகிவிட்டது.

2. முப்பிரிவுகள். மக்கட் சமுதாயத்தில் மூன்று திட்டங்கள் உண்டு. 1 அரசியல், 2. சமூகம். 3. சமயம். அரசியலானது சமயத்தையும்சமூகத்தையும் பற்றியிருந்தது என்று சொன்னோம். இப்போது சில நாடுகளில் அரசியல் சமூகத்திலிருந்து சமயத்தைப் பிரித்து அதனை விலக்கி வருகிறது என்றும் கூறினோம். அரசியல் மக்கட் சமுதாயத்திற்கு இன்றியமையாதது. சமூக நிலையோ பெரும்பான்மை போற்றக்கூடியது. ஆனால், சமயமோ அவசியம் இல்லை என்றும் சிலர் கூறத் தொடங்குகிறார்கள். அரசியல் தனக்கு வேண்டிய விதிகளை இயற்றுவது அன்றி சமூக விதிகளையும் இயற்றுகின்றது. ஆனால் சமயத்தைப் பற்றி விதிகள் இயற்றுவது இல்லை. அரசியல் பிற நாடுகளோடு எவ்வாறு தான் ஒழுகவேண்டும் என்றும் தன்னைத்தான் எவ்வாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்றும் முயற்சிக்கிறது. அவ்விதிகளைப் பொறுத்தே அரசியலின் போக்கும் திடமும் நிற்கின்றன. அதனை விரிக்கும் நூல் அரசியல் அறிவு அல்லது ஞானம் என்று பெயர். இதனைப் பெரும்பாலும் அரசாங்கத்தில் உள்ள சட்ட சபைகள் தற்காலத்தில் செய்கின்றன. அதனை வெறுத்தோ புறக்கணித்தோ குடிகள் வாழ இயலாது. இவ்விதிகளை முற்காலத்தில் அரசனும் அவனுடைய அமைச்சர்களுமே செய்துவந்தார்கள். தற்காலத்திலேயோ மக்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகள் செய்து வருகிறார்கள். இதுதான் அரசியல் திட்டம். இனி சமூகம் ஒழுங்காக நடைபெறுவதற்கு விதிகள் இயற்றப்படுவதும் உண்டு. அவைகளையும் தற்காலத்தில் அரசியலே செய்து வருகிறது. ஆனால் மூன்றாவதான சமயத்தைப் பற்றி அரசியலார் யாதொன்றும் செய்வதில்லை. அரசியல் சம்பந்தம் இல்லாத சமயாசாரியர்களே சமயத்திற்கு ஏற்ற விதிகளை இயற்றியுள்ளார்கள். இந்த வகையில் இம்மூன்று திட்டங்களும் நடைபெற்று வருகின்றன.

3. ஒன்றுக்கொன்று செய்யும் உதவி: அரசியல் தனக்கும் சமூகத்திற்கும் எவ்வாறு திட்டங்கள் விதித்து வருகின்றது என்று சொன்னோம். சமயத்திற்கு அது யாதொரு விதியும் விதிப்பதில்லை என்றும் சொன்னோம். இனி சமூகம் மற்ற இரண்டையும் எவ்வாறு போற்றுகின்றது என்பதை ஆராய்வோம். மக்கட் சமுதாயம் இல்லாவிடில் அரசியலும் இல்லை, சமயமும் இல்லை. சமூகம் தன்னைத்தான் காப்பாற்றுவதற்கும் ஒழுங்காக முன்னேறுவதற்கும் பல திட்டங்களைச் செய்துகொள்ளும். அதில் ஒன்று அரசியல். மற்றொன்று சமயம். சமூகம் அரசியல் திட்டத்தை வகுத்துத் தனக்கு உரிய விதிகளையும் ஏற்படுத்தும். அரசியல் திட்டத்தில் சமாதானம், போர், குற்றம், தண்டம், வரிவிதி, செலவு முதலியவைகள் அடங்கும். ஆனால் சமூக விதிகளில் படிப்பு, நற்பழக்கம், நோயற்ற வாழ்வு, ஒழுக்கம் முதலியவைகள் சேரும். பொதுமக்களிடம் வாங்கும் வரிகளைக் கொண்டு அரசியலானது சமூகச் சீர்திருத்தத்தைச் செய்கின்றது. சமூகம் தான் முன்னேறுவதற்கு விதிகளைச் செய்வது அல்லாமல் சமயவிதிகளையும் காப்பாற்றுகின்றது. ஆகவே சமூகமானது அரசியலையும் சமயத்தையும் ஒருங்கே போற்றுவதாகும். சைவசாத்திரத்தில் பதியை சத்து என்றும், பாசத்தை அசத்து என்றும், பசுவை சதசத் என்றும் கூறுவது வழக்கு. அதே முறையில் சமூகமானது அரசியலையும் சமயத்தையும் போற்றுகிறது என்றால் ஓரளவிற்கு உவமையாகிறது அல்லவா?

எப்பொழுது பாரத அரசியல் சமயத்தை விலக்கி விட்டதோ அப்போதே அரசியலைச் சமயமானது யாதொரு உதவியையும் கேட்க இடம் இல்லை. ஆனால் சமூகநிலை அவ்வாறு அன்று. அரசியல் சமூகவிதிகளை ஏற்படுத்துவதில் பங்கு எடுத்துக்கொள்ளும் என்று சொன்னோம். அந்த விதிகளில் தனக்கு நன்மை பயக்கும்படியான சிலவற்றைத் தேடி அவற்றின் மூலமாகச் சமயமானது உதவி பெறக்கூடும். இந்தமுறையீடு தான் நம் நாட்டில் சமயத்தில் ஈடுபடுகிறவர்கள் கையாளவேண்டி வரும். அரசியலை நேரா

கக் கேட்க முடியாவிட்டாலும் சமூக விதிகளின் மூலமாக அவசியமான உதவிகளைச் சமயம் கேட்கக்கூடும். சில உதாரணங்களினால் இதனை விளக்குவோமாக.

4. படிப்பு: படிப்புத் திட்டம் சமூகவிதிகளில் ஒன்று. இதற்கு அரசியலார் பெருந் தொகைகளை செலவழிக்கக் கட்டுப்பட்டுள்ளார்கள். எல்லாமக்கட்கும் படிப்பைக் கொடுத்து அவர்களை அறிவாளிகள் ஆக்கித் தகுந்த பிரஜைகள் ஆக்குவது அரசியலின் கடமை. படிப்பு இரண்டு விதம். சமயப் படிப்பு, சமயச் சார்பற்ற படிப்பு என்பன. சமயச் சார்பற்ற படிப்புக்கு அரசியல் உதவி புரியும். சமயப் படிப்புக்கு உதவி புரியாது. ஆனால் படிப்பு நிலையங்களாகிய பாடசாலைகளில் சமயச் சார்புள்ளோர் ஈடுபட்டுவருகிறார்கள். இவர்களுக்கு அரசியல் உதவி புரியும். அப்படிப்பட்ட உதவியை ஓரளவு சமயத்திற்குப் பயன்படத்தக்க முறையில் உபயோகிக்கக்கூடும். நூலகங்கள் பத்திரிகைச் சாலைகள் இவைகளில் சமயப் பகுதிகள் மிகுதியும் உண்டு. தமிழ் நாட்டுச் சமய நூல்களை விலக்கி விட்டால் சமயச்சார்பற்ற நூலகங்கள் குறைந்துபோகும். மாணவர்களுடைய பாடங்களிலும் சமயப் பாடங்களே மிகுதியாக உள்ளன. தற்போது நூலக இயக்கம் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால் சமய மேன்மைக்கும் ஓர் ஆதரவு ஏற்படுகின்றது அல்லவா ?

5. நற்பழக்கங்கள்: சமூக மேன்மைக்கு நற்பழக்கங்களே அடிப்படையான ஆதாரங்கள். இவையே காட்டுமிராண்டிகளை நாகரிகர்கள் ஆக்கிவிடுகின்றன. துர்ப் பழக்கங்களிலே கட்குடி, சூது, புகை குடித்தல் முதலியன உண்டு. சமூக முன்னேற்றத்திற்கு இவைகளை அறவே போக்க வேண்டும். இவைகள் தாம் மஞ்சள் நிறத்தார்களை அநாகரிகர்கள் ஆக்கிவிட்டன. சமூகச் சீர்திருத்தம் அன்றி சமயங்களும் இவைகளை வெறுத்து நல்ல பழக்கங்கள் நாட்டில் ஏற்படுவதற்கு முயலுகின்றன. நமது நாட்டில் கட்குடி நிறுத்தப்பட்டது. சூதாடுதல் தண்டிக்கப் படுகின்றது. இளைஞர்கள் புகை குடிக்கப்படாது என்று விதி ஏற்படுத்தி

வருகிறார்கள். சமூகச் சீர்திருத்தத்தில் அரசியல் செய்யும் இந்த முறைகளைச் சமயமும் ஏற்றுக்கொண்டு உதவிபுரிய வேண்டும். சமயத்தில் ஈடுபடுகின்ற மக்களும் சமயங்களும் நற்பழக்கங்களைச் சமூகம் கொள்வதற்காகப் பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும்.

6. தூய்மை: மக்கள் தூய்மையோடு இருப்பதற்கும், அவர்களுக்கு நோய்வராமல் காப்பதற்கும், நோய் வந்தால் பிணிகளைத் தீர்ப்பதற்கும் அரசியலார் செலவு செய்வதோடல்லாமல் விதிகளையும் இயற்றியுள்ளார்கள். இது அரசியல் செய்யும் சமூக சேவை. இந்த சேவையில் சமயச் சேவகர்களும் சங்கங்களும் பலவகைகளில் ஈடுபடலாம். நமது நாட்டில் நோய்கள் பரவுவதற்கு அசுத்தமான சேரிகளே காரணம். படிப்புள்ள வீடுகளிலும்கூட தூய்மை இன்மையைக் காணலாம். சமயப் பணியாளர்கள் சேரித் திருப்பணியில் இறங்குவது ஒரு உத்தமச் செயல். நமது சமாஜப் பொதுக்கூட்டங்களிலும் கோடை வகுப்புகளிலும் சேரிப் பணியை ஒரு திட்டமாக ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால் பொது மக்கள் இதனைச் சிறப்பாகக் கைக்கொள்ளவில்லை. சைவப்பெருமகன் பண்டைத் தமிழன் போல் "தனக்கென வாழா பிறர்க்குரியாளன்" ஆவது எப்படியோ? சேரிப் பணிமட்டும் அல்ல. நோயாளிகள் சிகிச்சைக்காகச் செல்லும் வைத்தியசாலைகளுக்குச் சென்று ஆறுதல் சொல்லுவதும் நமது கடமை அல்லவா? நமது அரசியல் மருத்துவச் சாலைகளில் கிறிஸ்தவர்களும் இஸ்லாமியரும் சென்று ஆறுதல் கூறுகிறார்கள். நோயாளிகளுக்கு எதிரே சுவர்களில் கிறிஸ்துவப்படங்கள் அணிசெய்கின்றன. முருகப்பெருமானையும் நடராஜப் பெருமானையும் காணோம். ஆனால் இந்தத் திருப்பணியை ஈழநாட்டுக் கொழும்பு விவேகானந்த சபையார் செய்கிறார்கள். நாமும் செய்ய வேண்டாமா? எத்தனை சைவ சங்கங்கள் மருத்துவ சாலைகளை வைத்திருக்கின்றன? தான் மட்டும் முத்திவீடு அடைந்தால் அடுத்த வீட்டான் முத்திவீடு அடைய வேண்டாமா?

7. உயிர்கட்கு உதவி : உயிர்கள் இருவகைப் படும். உயர்திணை, அஃறிணை என்பன. உயர்திணையில் மக்கள் சேர்வார்கள். அஃறிணையில் எறும்புமுதல் யானை ஈறாக உள்ள உயிர்கள் சேரும். மனிதர்கள் ஒழுக்கமாக வாழ வேண்டும். ஒழுக்கம் கெட்டால் குற்றவாளிகள் ஆகிறார்கள். அவ்வாறு கெடாதபடி காக்கவேண்டுவது சமய மக்களின் கடமை. குற்றம் செய்தவர்கள் சிறைக்கு அனுப்பப்படு கிறார்கள். சிறையாட்களும் மக்களே. அவர்களைத் திருப்பி நல்லொழுக்கத்திற்குச் சேர்த்துவிப்பது சமயப் பணியாளர் களின் கடமை அல்லவா ? சிறையாட்களுக்கு நல்லொழுக்க மும் சமயமும் போதிப்பதற்குச்சட்டவசதி உண்டு. அதனைக் கிறிஸ்துவர்களும் இஸ்லாமியரும் செய்துவருகிறார்கள். சைவ சமயர்கள் எத்தனைபேர் செய்கிறார்கள் என்று கேட்கி றேன். கொழும்பில் செய்கிறார்கள். தமிழ் நாட்டில் ஏன் செய் யக்கூடாது? முன்னாளில் மணிமேகலை சிறைக் கோட்டத்தை அறக்கோட்டம் ஆக்கவில்லையா ? இக்காலத்துச் சைவப் பெண்மணிகள் இத்திருப்பணியை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது ?

மற்ற உயிர்களுக்குத் தீங்குவிளைவிக்கக் கூடாது என்று சட்டம் இருக்கின்றது. அதற்கு ஒரு சங்கமும் ஏற்பட் டிருக்கின்றது. இதில் சமய மக்கள் ஈடுபடவேண்டியது அவசியம். பசு, எருது, எருமை, கழுதை, நாய் முதலிய சமூக உயிர்கள் அடிக்கடி துன்புறுத்தப்படுவதை நாம் அறிவோம். மிகச்சிறந்த ஆசாரத்தைக் கொண்ட சமய மக்களும் இத் தீங்குகளைக் கண்டு வெறுக்காதிருக்கிறார்கள். மணிவாசகப் பெருமான் குயில், கிளி, தும்பி முதலியவை களுக்கும் ஈடேற்றம் தந்தார். நாம் ஏன் இந்த வகையில் ஈடுபடக் கூடாது. சமூகச் சட்டம் இருக்கின்றது. அதனைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டாமா?

8. காட்சி நிலையங்கள் : நமது நாட்டில் காட்சி நிலையங்கள் பெருகிக்கொண்டு வருகின்றன. காட்சிகளில் காதுக்கும் கண்ணுக்கும் இன்பம் தரக்கூடிய முறைகள் மிகுதியாகி வருகின்றன. யந்திரங்களின் மூலம் ஒலி பெருக்

கும் ஒளிப்படங்களும் எங்கும் பரப்பப் படுகின்றன. ஒலியிலே மக்களைத் தாழ்மைப்படுத்தக்கூடிய ஆபாசப்பாடல்கள் நாடோறும் கேட்கின்றோம். ஒளிப்படங்களிலே ஆபாசம் மட்டும் அல்ல, நமது சமயச்சரிதங்களைக் கேவலப்படுத்தும் படங்களும் சமயத்தைப் புண்படுத்தக்கூடிய படங்களும் காண்பிக்கப்படுகின்றன. அடியார்களுடைய சரிதங்களைக் கண்டபடி திருத்தியும் சேர்த்தியும் நடிக்கிறார்கள். பெருமானின் மூர்த்தங்களை வேடிக்கை உருவங்கள் ஆக்குகிறார்கள். இவைகளை எல்லாம் தடுக்க வேண்டுவது சமயிகளின் கடமை அல்லவா? தூய்மையான திருப்பாடல்களை ஓதுவிக்கச் செய்வதும் திருப்படங்களைக் காட்டச் செய்வதுமே ஒழுங்கான முறை ஆகும். இந்த முறையில் விதிகளைப் பயன்படுத்திக்கொள்வது நன்மை ஆகும்.

9. சமூகச் சீர்திருத்தங்கள் : சமீப காலத்திலே அரசியலார்கள் அவசியமான சில சமூகச் சீர்திருத்தங்களைச் செய்து வந்திருக்கிறார்கள். நகரங்களிலே தற்கால நாகரிகம் பெருகப் பெருக சில சீர்கேடுகளும் ஏற்பட்டு வருகின்றன. அச் சீர்கேடுகளை அவ்வப்போதே தடுக்கா விட்டால் சமூக வாழ்வு மிகவும் கெட்டு விடும். மிகப்பிரசித்தி பெற்றிருந்த ரோமானிய ராஜ்ஜியம் சீர்கேடுகளாலேயே அழிவுற்றது. அந் நாட்டுப் பெண் மக்கள் பரத்தையர் போல் உல்லாச வாழ்க்கை கொண்டிருந்தார்கள். அப்போது பலவீனம் ஏற்பட்டு அநாகரிகர்களால் அடிமையாக்கப் பட்டார்கள். அவ்விதமான சீரழிவு தற்காலத்தில் சில ஐரோப்பா நாடுகளில் உண்டு. அவ்வித சீரழிவு நம் நாட்டிற்கும் வராமல் பாதுகாப்பதற்காக சமூகச் சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்று பரத்தை எதிர்ப்புச் சட்டம். சிறு பெண்களைப் பரத்தையர்க்கு விற்றல், அவர்களைப் பரத்தைத் தொழில்களுக்குப் பழக்குதல் முதலியவைகளைத் தடுப்பதற்காக அச் சட்டம் ஏற்பட்டுள்ளது. அவ்வித செயல்கள் குற்றம் என்று சொல்லித் தண்டனை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை அனுசரித்து சேவா சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

மற்றும் சிறுவயதிலேயே திருட்டு முதலிய கெட்ட குணங்கள் தோன்றி விட்டால் அக்குணம் சுடுகாடு மட்டும் நீங்காது இருப்பது உண்டு. தொடக்கத்திலேயே கெட்ட குணம் வராமல் தடைசெய்ய வேண்டும். அதற்காகச் சீர் திருத்தப் பாடசாலைகளும் நீதி மன்றங்களும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவைகளுக்காகத் தனிச்சட்டங்களும் உண்டு. இவைகளிலே பல சேவா சங்கங்கள் வேலை செய்கின்றன.

மேலும் நம் நாட்டில் அனாதைப் பிள்ளைகள் பெருகிக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்குப் படிப்பும் ஒழுக்கமும் கற்றுக் கொடுக்காவிட்டால் பிச்சைக்காரர்கள் ஆகிக் குற்றவாளிகள் ஆவார்கள். இதனால் நாட்டிற்கு மிகவும் கெடுதி. ஆகவே ஆனாதை விடுதிகள் மிகவும் அவசியம். வெறும் அன்னதான சாமஜங்கள் ஏற்படுத்தினால் பயன் இல்லை. ஒரு கைத்தொழில் கற்றுக்கொடுத்து அனாதைகளை நல்ல வழிக்குக் கொண்டுபோவது சரியானது.

நாட்டில் பிச்சை எடுத்துப்பிழைப்பவர்கள் கணக்கின்றி இருக்கிறார்கள். தம் குற்றத்தை மறைப்பதற்குக் காவி அணிந்து பிழைப்பவர்களுக்குக் கணக்கில்லை. பிச்சை எடுப்பது இழிவு என்று அவர்களுக்குத் தோன்றுவது இல்லை. எந்தக் கோயில் குளம் தலம் பார்த்தாலும் பிச்சைக்காரர்களுடைய ஆரவாரமே அதிகம். பிச்சைக்காரர்களை நல்ல மனிதர்கள் ஆக்கவேண்டும் என்று அரசியலாருக்குக் கருத்து உண்டு. ஆனால் அச் சட்டம் சரியாய் நடத்தப் படவில்லை.

இதுவரை சொன்ன சீர்திருத்தங்கள் சேவாசங்கத்தார்கள் மட்டும் அல்ல சமய சேவை செய்பவர்களும் ஏற்றுக் கொள்ளத்தக்கவைகளே. இந்தச் சேவைகளைக் கிறிஸ்துவ சமயக் குரவர்கள் செய்துகொண்டு வருகிறார்கள். சைவ சங்கத்தார்கள் செய்வதில்லை. சைவ மடங்களும் சைவக் கோயில் அதிகாரிகளும் இந்தச் சேவைகளைப் புறக்கணித்து வருகிறார்கள்.

10. நம் கடமை : மேலே விவரித்துச் சொன்ன செயல்களெல்லாம் சமூக சீர்திருத்தச் செயல்களே. அவை களை அரசியல் பகுதி என்பதும் சமயப் பகுதி என்பதும் முற்றிலும் எடுத்துக் கொள்ள இயலாது. ஆனால் அவை களை அரசியலார் வகுத்துள்ளார்கள். அரசியல் செவ்வை யாக நடைபெற வேண்டுமென்றால் சமூக விதிகள் அவசியம் அல்லவா? அரசியல் அவைகளை வகுத்த போதிலும் சேவா சங்கங்களின் உதவியின்றி அரசியல் மட்டும் அவைகளை நடத்துவது சிரமமாய் இருக்கும். ஆகவே, அவைகளை சேவா சங்கங்கள் நடத்திவருகின்றன. ஆனாலும் சேவாசங்கங்களை விடச் சமயச் சங்கங்கள் இவைகளைச் செவ்வையாக நடத்த முடியும். சமயத்தில் ஈடுபட்டு இருக்கின்றபெரியார்கள் சமூக விதிகளைக் கருவிகளாகக் கொண்டு மக்களுக்கு மிகுந்த நன்மை புரியலாம். அதற்கு அரசியல் உதவிபுரியும். அவ் வுதவிகளை ஏற்றுக் கொண்டு சமூக உயர்வை நோக்கமாகக் கொண்டு நமது பெரியார்கள் பாடுபட முன்வரவேண்டும். இந்தச் சேவைகளில் தற்காலச் சைவப் பெரியார்கள் ஈடுபடு வதில்லை. ஈடுபடும் பட்சத்தில் சமயம் மக்களுக்கு உண்மை யான மேன்மை தரும். ஏனைய சமயங்கள் செய்து வருவதை நாம் ஏன் செய்யக் கூடாதோ ? இக்காலத்திலும் கிணற்றுத் தவளைகள் போல் வாழ்வது சரியல்ல.

கவிப்பகுதி

நலந்தரும் நாமம்

(R. பஞ்சநதம்பிள்ளை, தமிழ் ஆசிரியர், திருச்சிராப்பள்ளி)

மானிடப் பிறவி எடுத்ததன் பயன், மதிசூடும் அண்ண லாகிய பெருமானை முக்கரணங்களாலும் வழிபடுவதற்கே என்று கூறுவர். “மானுடப் பிறவிதானும் வகுத்தது மன வாக்காய ஆனிடத்தைந்து மாடும் அரன்பணிக்காகவன்றோ” என்று சித்தியார் கூறுகின்றது. அங்கங்கள் அனைத்தும் இறைவனை வழிபட வேண்டிய வகையில் திருநாவுக்கரசர்

திருவங்கமாலை என்னும் பதிகத்தைப் பாடினார். அங்கங்களில் வாய் என்பது ஒன்று. புறக்கோயிலுக்குக் கோபுரம் அமைந்தது போல உடற்கோயிலுக்கு வாய் கோபுரமாய் உள்ளது. "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம், வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுர வாசல்" என்பது திருமந்திரம். வாயின் தொழில் இறைவனை வாழ்த்துதல். "வாயே வாழ்த்து கண்டாய்" என்கிறார் அப்பர். இறைவனை வாயார வாழ்த்துதற்காகவே பன்னிதிரு முறைகள் உள்ளன. "வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர் இனத்தகத்தான்" என்றும், "நாவார நம்பனையே பாடப் பெற்றோம்" என்றும் அப்பர் கூறுகிறார். எனவே பலரும் அறியும்படி இறைவனைப் புகழ்தல் வாழ்த்து ஆகும். இவ்வகையில் இறைவனை இன்ப காலத்தும் துன்பகாலத்தும் புகழ்ந்து பாடி நாவுக்கரசர் திருநாவுக்கரசரானார்.

இனி நாவின் மற்றோர் தொழில் மந்திரங்களைச் சொல்வது. மந்திரமென்பது மறைவாகப் பிறர் அறியாதபடி சொல்வது. 'கற்றுக் கொள்வன வாயுள நாவுள' என்கிறார் அப்பர். மந்திரங்கள் பல உண்டு. சைவ மதத்தில் சிறப்பாகச் சொல்லப்படுவது நமச்சிவாய என்னும் மந்திரம். 'நற்றுணையாவது நமச்சி வாயவே' என்றும், 'நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே' என்றும் அப்பர் கூறுகின்றார். 'நமச்சிவாய வாழ்க' என்கிறார் மணிவாசகர். "நமச்சிவாயத்தை நான் மறவேனே" என்கிறார் இராமலிங்க அடிகள்.

இம்மந்திரத்தின் பெருமைகள் எல்லாவற்றையும் ஒருசேரத் தொகுத்துவைத்தது போலப் பெரும்பற்றப் புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் ஓர் பாட்டு உண்டு. சமணர்களுக்கு நமச்சிவாய மந்திரத்தின் சிறப்புக்களை அறிவுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. அப்பாடல் வருமாறு :

"குலம்தரும் நீதிமிக்க குணந்தரும் வேதஞ்சொல்லும்
பலம்தரும் உயர்ந்தசாயுச் சியந்தரும் பழுதிலாத

நலந்தரும் எல்லாம்வல்ல சயந்தரும் நிறைந்தசெல்வ
நலந்தரும் பெருமைகுன்ரு நயந்தரு நமச்சிவாய ''

இவ்வாறே வைணவ சமயத்திலும் திருமாலின் அருளைப் பெறுவதற்குரிய ஓர் மந்திரம் உண்டு. அது நாராயணுய என்னும் மந்திரம். இம்மந்திரத்தின் பெருமைகளைத் தொகுத்துப் பன்னிரண்டு ஆழ்வார்களில் திருமங்கை ஆழ்வார் ஓர் அழகான பாடலைப் பாடியுள்ளார். அப்பாடல் வருமாறு :

" குலந்தரும் செல்வந்தந்திடும் அடியார்படுதுயர் ஆயினவெல்லாம்
நிலந்தாஞ்செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந்தந்திடும் பெற்றதாயினு மாயினசெய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணுய வென்னும் நாமம்"

இந்த இரண்டு பாடல்களும் ஒரே தன்மையில் அமைந்திருப்பதைக் காணலாம். அறுபத்து மூன்று நாயன்மார்களில் அப்பூதி அடிகள் 'நாவுக்கரசு' என்னும் குருவின் நாமத்தையே பலகாலும் சொல்லும் வகையில் தம்பிள்ளைகளுக்குப் பெயராக வைத்து வழங்கினுர். ராம மந்திரத்தை ஓர் மரத்தின் பெயராக அமைத்து ஒருவர் சொல்லி வந்ததாக அறிகிறோம். ஆகவே இறைவனது நாமத்தையோ அடியார் பெயரையோ, அவரவர் கருதும் செம்பொருளையோ மந்திரமாகப் பாவித்து நாவினுல் பலமுறை சொல்வதன் மூலம் வாய்க் கோபுரவாயிலின் வழியாய் இறைவனது திருவருளைப் பெறுவதற்கு இடம் ஏற்படுகிறது.

——

ஒரு திருத்தம்

(சிவஞான சித்தியார் சுபக்கம் ௩௨௪-ஆம் திருப்பாடல்)

(சித்தாந்த ரத்நாகரம் முத்து-சு. மாணிக்கவாசக முதலியார் ஆரணி)

சிவஞான சித்தியார் சுபக்கம் 'அறிவரியான்' எனத் தொடங்கும் (௩௨௪-ஆம்) திருப்பாடலின் ஈற்றில் 'நேசத் தாற் றொழுதிடுநீ பாசத்தார் விடவே' என்றுளது. இது 'தொழு தெழுமின் பாசத்தாள் விடவே' என்றுவேறுபட்ட பாடத்தொடும் சில பதிப்புட் காணப்படுகின்றது. அறு வருரையிலும் திருவிளங்கம் உரையிலும் காண்க.

நேசத்தால் என்ற பாடம் பற்றிய திருத்தமே ஈண்டுக் கருதப்பட்டமையின், அப்பாடாந்தரம் இப்பொழுதைக்கு வேண்டற்பாற் றன்று. குறிப்பாக அதன் பொருந்தாமை யும் இதிலே தோன்றிவிடும்.

"தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்
தன்னுணரத் தன்னு ளிருத்தலாற்—றன்னுணரு
நேசத்தர் தம்பால் நிகழுந்ததி நெய்போற்
பாசத்தார்க் கின்றாம் பதி"

என்பது சிவஞான போதவெண்பா. இது சைவ சித்தாந்தக் கழகப் பதிப்புள் தளைதட்ட நிற்கும் பிழைபட்டதாக காணப் படுகின்றது.

இதனுள், நேசத்தர் என்பது 'நேசத்தார்' என்றிருத் தல் வேண்டுமென்றறியக் கிடக்கின்றது.

சிவஞான போதச் சிற்றுரை (சமாஜப் பதிப்பு) பார்க் கின் அது விளங்கும். சுவாமிநாத பண்டிதர் பதிப்புள், சிற் றுரையில் இல்லை. பாடியத்துள் உண்டு.

சிவஞான முனிவர் 'நேசத்தார்' என்ற பாடமே கொண்டுளார் என்பது, "தன்னுணரும் நேசத்தார்

எனப் பெயரடையானும் ஓரேதுக் கூறப்பட்டது” என்ற வாக்கியத்தா லறியப்படுகின்றது. (பாடியம் பார்க்க) எல்லா ருடைய பதிப்பிலும் உளது.

பாண்டிப் பெருமாள் விருத்தியில் நேசத்தாரென்றில்லை. வண்ணக் களஞ்சியம்பதிப்பிலுமில்லை. சமாஜப்(முதற்) பதிப் பில்இருப்பினும் கொள்ளற் பாலதன்று. சிவஞான போதத் திற்கும் சிவஞான சித்தியார்க்கும் பொருளொருமையே யன்றிச் சொல்லொருமையும் சொற்றொடரொருமையும் உள. அவ்வுண்மையை வேறு கட்டுரையுள் அறியலாம். இங்கு அது விரிவஞ்சி விடப்பட்டது.

சிவஞானபோத வெண்பாவில், “நேசத்தார் தாம்பானி கழுந்ததி நெய்போற் பாசத்தார்க் கின்றாம் பதி ” என்று வருவதையும்,

சிவஞான சித்தியாரில், “நேசத்தாற் றொழுதிடுநீ பாசத்தார் விடவே” என்று வருவதையும் ஒத்திட்டுணர்தல் நன்று.

முதனூலுள் ‘நேசத்தார்’ என்று பெயராயுள்ளது. வழிநூலுள் அவ்வாறின்றி நேசத்தால் என்று மூன்றாம் வேற்றுமை யுருபேற்று நிற்கின்றது.

சிவஞான சித்தியார்க்குள்ள சிவஞான முனிவர் அரு ளிய பொழிப்புரைக்கண், ‘மெய்யன்பர்’ என்றதையும், ‘அவரை’ என்றதையும் நோக்கின் அது நேசத்தார் என்றே இருத்தற்குரியது எனத் தெளிவாகும்.

அறுவருரையுள்ளே, ஞானப் பிரகாசரல்லாத வனை யோர் உரைக்கண், இதுபற்றி யாராய்ந்தால், நேசத்தார் என்ற பாடமே கொண்டெழுதியிருக்கலாம் என்று கருத இடனுண்டு. உளதேனும் உறுதியாகக் கோடல் ஒல்லாது. சிவஞான முனிவருரை மட்டும் ‘நேசத்தார்’ என்ற பாடமே கொண்டுளது.

சிவஞான முனிவர் எழுதிய முதல் வழி நூலுரைகளை நோக்கின், ‘நேசத்தார்’ என்று பெயராயிருத்தலே நன்று என்றும், நேசத்தால் என்றுள்ள பாடம் அவருரைக்குப்

பொருந்தாப் பாடமென்றும், அவருரைப் பதிப்புக்களெல்லாம் அவருரையொடு பொருந்தாத பாடத்தை யேற்று நிற்றல் ஆராய்ச்சியின்மையால் நேர்ந்ததென்றும் வெளிப்படும். படவே, சிவஞான சித்தியாருள், நேசத்தாற் றொழுதிடு என்பது "நேசத்தாற் றொழுதிடு" என்றிருத்தல் வேண்டும் என்பது தெளிவாயிற்று. ஆகவே பாசத்தாரை விட நேசத்தாரைத் தொழுதிடு என்று நன்கு பொருள் குறித்து நிற்கும் அத்தொடரை அறிஞர் தள்ளத் துணியார் என்க. நேசத்தாரைத் தொழுதிடு என்னற்பாலது நேசத்தார்த் தொழுதிடு என்ன நின்றது. முன்னது இரண்டன் விரி, பின்னது அத்தொகை.

சிவஞான மாமுனிவர் உரையுள், பாசத்தார் என்றதற்குப் பாசப் பற்றுடையாரது பற்று என்றுகு பெயர்ப் பொருள் கூறியதும் நேசத்தார் என்பதற்குத் திருவேடமுடைய மெய்யன்பர் என்று பொருள் கூறி, 'அவரை' என்று மீண்டுஞ் சுட்டிக்காட்டி, அவ்வேடமுடையாரென்று எடுத்துக்கொண்டுரைக்க என விசேடத்தும் உணர்த்தியருளியதுமாகிய அருமையை ஆராயும் அறிஞர்க்கே இத்திருத்தம் பொருத்தம் எனல் வருத்தமற விளங்கும்.

இதுகாறும் குறித்தவற்றால், சிவஞான போதச் சிற்றுரை பேருரை யிரண்டனுள்ளும் 'தன்னுணர' என்ற தொடக்கத்து வெண்பாவின்கண் நேசத்தர் என்றிருப்பது பிழையென்றும், நேசத்தார் என்றிருப்பதே ஆசிரியர் கருத்திற் கேற்றது என்றும், நேசத்தார் பாசத்தார் என்று எதுகைப் பொருத்தம் முற்றியதென்றும், பேருரையிலுள்ள தொடர் அதன் உண்மையுருவத்தைக் காட்டுகிறதென்றும், முதனூலும் வழிநூலும் ஒன்றற்கொன்று ஆதாரவாய் நின்று அதை நிறுவுகின்றதென்றும், வழிநூலிலும் நேசத்தால் என்றுள்ளது பிழையென்றும், எல்லாப் பதிப்பும் அத்திறத்தில் உற்றுநோக்காது வெளியிடப்பட்டன என்றும், நேசத்தார்த்தொழுதிடு' என்றதே உண்மைப் பாடம் என்றும், இனிது விளங்கும். இத்தகைய பிழைகள் வேறுமுள.

—

6. ஆராய்ச்சிப் பகுதி

'நாலும் இரண்டும்'

அ. தா. ப. திருஞானசம்பந்தன்

நம்மிடையில் வழங்கி வரும் பழமொழிகளுக்கு எல்லை இல்லை அல்லவா? அங்ஙனம் வழங்கி வரும் பழமொழிகளில் ஒன்றே "ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" என்பதாகும். நாலும் இரண்டும் என்றால் என்ன? நாலு என்பது நான்கடிகளால் யாக்கப்பெற்ற நாலடியார் என்ற நூலையே குறிக்கும். இரண்டு என்பது குறள் வெண்பாக்களால் இயற்றப் பெற்ற திருக்குறளையே குறிப்பதாகும். இந் நாலடியாரும், திருக்குறளும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ் கணக்கு என்ற தொடக்கத்தனவாய் வழங்கப்படும் தொகை நூல்களுள், பதினெண்கீழ் கணக்கின் பகுதியாய் உள்ளன. இவை இரண்டும் சங்க நூல்களல்ல; சங்கஞ் சார்ந்த நூல்கள்

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூல
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ் கணக்கு

என்ற வெண்பாவானது சங்கஞ் சார்ந்த நூல்களின் பட்டியலைப் பகர்கின்றது.

நாலடியாரில் உள்ள பாடல்கள் பல ஆசிரியர்களால் இயற்றப்பெற்ற செய்யுட்கள் ஒன்று சேர்க்கப்பட்டதினால், ஒரு நூலாக உருவாக்கப்பெற்றவையாகும். திருக்குறளோ ஒரு பெரிய அறச்செல்வரால் இயற்றப்பெற்ற ஓர் நூலாகும். இவை இரண்டும் அளித்து நிற்கும் உண்மைப் பொருள்கள் எவை எவை என்பன பற்றி ஆய்வோம். திருக்குறளுக்கு பதின்மர் தெள்ளிதின் உரையெழுதினதாக அறிஞர் கூறுவர். இன்று நமக்குக் கிடைக்கும் உரைகள் ஒன்றிரண்டேயாகும். ஆனால் திருக்குறளை ஒரு மூல நூலாகக் கொண்டால், அந் நூலுக்கு உரையெனவே

நாலடியார் எழுந்ததெனலாம். நாலடியார் திருக்குறளுக் கென எழுந்த உரை நூலே எனக் கொள்ளின் மெத்தவும் பொருந்தும். இரண்டு நூல்களும் அறத்தின் அடிப்படை யில் எழுந்தனவே. நாலடியார் ஆசிரியர்கள் வேற்றுச் சமயத்தைச் (சமண சமயம்) சார்ந்தவர்கள் என்ற ஒரு காரணங் காட்டி, அது தனித்த ஒரு சமயம் பற்றிப்பேசும் நூல் என்று குறுகிய மனப்பான்மை கொண்டு, வாதாட லாமே யொழிய, பொதுநோக்குக் கண்கொண்டு, அறம் பாடிச் சென்ற வழியில் நிற்கும் அன்பர்கள் அதனை ஒரு பொது நூல் எனவே காண்பர். மற்றுஞ் சமயவாதிகள் நிலையாமை முதலியவற்றைக் கூறுமிடத்து, இந்நூலைப் பெரும் பிரமாணமாக எடுத்தாண்டுளாரென்பது அவ்வம் மத நூல்களின் உரையைப் பார்க்கின் நன்கு விளங்கும். நாலும்-இரண்டுங் கூறும் விஷயங்கள் முக்கியமாகக் கவனிக்கத் தக்கதென்பது அவைகளின் அதிகார அட்ட வணையாலே இனிது புலப்படும்.

இரண்டு நூல்களும், அறத்தின்வழி நின்று இன்பந் துய்ப்பதையே வற்புறுத்துகின்றன. அறத்தைப் பற்றிப் பேசும் பொழுது, மிகுதியும் நிலையாமை பற்றியே வற் புறுத்தி நிற்கிறதெனலாம். ஈதென்ன? அறவழி வாழ நிலையாமை உணரவேண்டுமா? வேண்டும்! நிலையாமை பற்றியே சிந்தனை செய்து வந்தால் அது மனிதன் மனத்தை செல்லரிப்பது போல் அரித்து விடாதா? மக்கள் மனத் தைப் பாழ்படுத்தும் முகமாக, முடிவில் சமுதாயம் சீரழிந்து விடாதா? என்ற இன்னபிற கேள்விகள் எல்லாம் இன்று எழத்தான் செய்கின்றன. கேள்விகளை விடுவோர், சற்று நிதானமாக ஊன்றிப் பார்த்தால், தங்கள் தவற்றை நன் குணர்வர் என்பது ஒருதலை. நிலையாமையைப் பற்றியே, அற நூல்கள் வற்புறுத்திச் செல்கின்றன என்றால் அதில் ஒரு நியாயம் இருக்கவேண்டுமல்லவா? ஆம்! அது என்ன நியாயம்? நிலையாமையை வற்புறுத்திப் படிப்போர் மனத்தில் அதை நன்றாக ஊன்றச் செய்தால், வாழ்கின்ற வாழ்வில் காணும் அனைத்தும் நிலையுள்ளன என்பதைச் சற்று மறக்கவே அது வழிகளை வகுக்கின்றதேயன்றி, ஊக்கத்தைக் குறைத்துக் கொண்டு தலையை மழுக்கிக், கானகமேகி, காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கை வாழ

வேண்டும் என்று வகுக்காது. அத்தகைய நிலைக்கு அற நூல்கள் அழைத்துச் செல்கின்றன என்று நாம் எண்ணினாலும், அது தவறு, தவறுதான். நிலையாமை கண்ட மக்கள் பெற்ற இன்பமும் சொல்லத்தரமன்று. அவர்கள் பெருவாழ்வு வாழ்ந்ததாகவே பல நூல்களும் அறையும். சிலப்பதிகாரத்தில், கோவலனும்-கண்ணகியும் இருவரும் ஒத்த மனத்தினராய், இன்பந் துய்த்து வாழும் நிலையைக் கூறப்போந்த நாடாளாக் காடாண்ட கோமான் இளங்கோவடிகள், நிலையாமையைக் கண்டு இன்பந் துய்த்து வாழ்ந்தவர்போல் வாழ்ந்தனர் என்று கூறுவது படித்து இன்புறத் தக்கதாகும்.

தூமப் பணிகளொன்றித் தோய்ந்தாலென வொருவர்
காமர் மனைவியெனக் கைகலந்து—நாமம்
தொலையாத வின்பமெலாந் துன்னினர் மண்மேல்
நிலையாமை கண்டவர்போ னின்று.

நிலையாமை என்பது தமிழ் நூல்களில் தவருக நுழைக்கப்படவில்லை. இன்றைய போக்கில் நிமிடத்திற்கு நிமிடம் தவற்றிலேயே உழல்பவர்கள் கண்களுக்குப் பெரியோர்களுடைய அற வழிகளெல்லாம், தவருகவே தோன்ருமல் நல்லனவாகவாத் தோன்றும்? எப்பொழுதுமே, நாம் ஒரு நூலைப் படிக்குங்கால், அவ்வாசிரியன் வழியையும் அந்நூலின் போக்கையும் பின்பற்றிச் செல்ல வேண்டுமே தவிர நம் வழிக்கு அவைகளை அழைத்தல் தகாது. நாம் கற்கும் நூல்களை ஒரு மலைக்கே ஒப்பிட்டு உண்மையை உணர வேண்டும். நாம் மலையினிடத்தில்தான் சென்று அதன் எழிலைக் கண்டு மனமகிழ்வடைய வேண்டும். மலையானது, தன் எழிலைக் காட்ட என்றுமே நம் அருகில் வாராது. அஃதேபோல், நூல் வழிச் சார்ந்துதான் நாம் நின்று கற்கவேண்டுமே தவிர, அதனை நம்வழி ஈர்ப்பின் நாம் தவறுவோம். கற்களைச் சேமித்து செய்குன்ருகக் கண்டால், ஓரளவு இன்பங் கொடுக்குமே யன்றி, மலை அளித்து நிற்கும் அத்தனை இன்பத்தை அதனிடம் நாம் காண இயலாதன்றே! நூல்களை நம்வழிக்கு இழுத்து, வலிய பொருள் கண்டு, போலி இன்பங் காண்பது, செய்குன்றை ஆக்கி இன்பங் காண்டலையே ஒக்கும். இன்று திருக்குறளும்

நாலடியாரும், சமயக் கணக்கர் மதிவழி புகாது நிற்கிற தென்ற காரணத்தால், பலரும் தங்கள்பால் அந்நூல்களை இழுத்து வலிய பொருள்கள் கண்டு, தவறான வழிகளில் கருத்தைப் புகட்டுகின்றனர். அன்றியும் நிலையாமை போன்று வருகின்ற இடங்களெல்லாம், இடைச் செருக லாய் இருக்கலாமோ என்கிற ஐயத்தையும் எழுப்பு கின்றனர். எவ்வெவர் எதனைப்பற்றிப் பேசிச் செல்லினும் காலத்தின் வேகம் தூய மன அமைதி பெற்ற பெரியோர் கள் வாக்குகளைக் கொள்ளை கொள்ளா தல்லவா?

மேற்கண்ட இரு நூல்களும், செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை என்ற மூன்றினை யும் சிறப்பு முறையில் வலியுறுத்தி, அறத்தின் தன்மையை நிலை நாட்டுகின்றன. அவற்றை, ஒவ்வொன்றாகச் சற்று விரிவாய்க் காண்போம்.

நிலையில்லாதழியும் பொருள்களை நிலைநிற்பன என்று அப்பொருள்களின்மேல் பற்று வைப்பது நியாயமா? நியாயமாகாது! பின் அது எதனைக் காட்டுகிறது. சிறு மதி படைத்திருக்கிறோம் என்பதைத்தான் காட்டுகிறது. ஆகையால் நிலைத்த பொருள்களைப் பெறுதலை விரும்பாது, நிலையாத மற்றப் பொருள்களிடத்து ஆசை வைத்தால் அவ்வாசைக் காரணமாக பேரிடும்பையே வரும்.

நிலையாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை. —குறள்

கருத்தொருமை

செல்வம் நிலையாமை

ஒருவரிடத்தில் பெருஞ் செல்வம் வந்து சேருதலானது கூத்தாடுகின்ற சபையினிடத்துக் கூட்டம் வந்து கூடுதலை யொக்கும். அச் செல்வம், அவரை விட்டு நீங்குதலும், கூத்து முடிந்தவுடனே கூத்தைப் பார்க்கவந்தவர் கூட்டம் நீங்குதலை ஒக்கும் என்பதே. ஆதலால் செல்வம் ஒரு நிலை யில் நிற்பதல்ல என்பதை உணர்ந்து அறம் செய்க என்பதே குறிப்பாக நமக்கு விளங்குவதாகும்.

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று —குறள்

செல்வப் பொருள் நடுவு நிலைமையாக எத்தன்மைய ரிடத்தும், நிலைபெறுதலில்லாதாகி வண்டியினது உருளையைப் போல மேல் கீழாகி மாறுமாதலால், குற்றம் நீங்கிய மிக்க செல்வம், ஒருவனுக்கு உளதாயின் அது தோன்றிய காலந் தொடங்கி ஏர் நடந்ததனுலுண்டாகிய வுணவை விருந்தினர் முதலிய பலரோடும் அவன் உண்ணல் வேண்டும்.

துகடீர் பெருஞ் செல்வந் தோன்றியக் காற்றொட்டுப்
பகடு நடந்த கூழ்பல்லாரோடுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்.

இளமை நிலையாமை

பேசவொட்டாமல், நாவை அடக்கி விக்கல் மேலெழுந்து வருமுன் செய்யவேண்டிய தருமங்களை அதி விரைவாகச் செய்யவேண்டும் என்பதாகும். அதி விரைவாக என்பது மரணம் இன்னவேளை யென்றில்லாமல், இளமையிலுங்கூட தவருது வந்துவிடும் என்பதை அறிவித்தே யாகும். இக் கருத்து பற்றியே கபிலரும் தான் இயற்றிய அகவற்பாவில்,

" ஒன்றும் நன்றே செய்யவும் வேண்டும்
நன்றும் இன்றே செய்யவும் வேண்டும்
இன்றும் இன்னே செய்யவும் வேண்டும் " என்கிறுர்

நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும் —குறள்

கூனலாகி உடல் தளர்ந்து தலை நடுங்கி நடத்தற் காதரவாகத் தடியை ஊன்றி நடந்து விழுந்து மீளவும் எழுந்து செல்லும் இத் தன்மையாளரிடத்தும் முதிர்ந்த அறிவில்லாத காமத்தைக் கொள்ளுகின்ற மனிதர்களும் தம்முடைய கையிற் பிடித்த கோல் அந்த மனைவியினது கைக்கோல் ஆகிய காலத்தும் அம் மயக்கந் துன்பந் தருவதாகும்.

தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா
வீழா விறக்கு மிவண்மாட்டுங்—காழிலா
மம்மர்கொண் மாந்தர்க் கணங்காகுந் தன்மைக்கோ
லம்மனைக் கோலாகிய ஞான்று.

யாக்கை நிலையாமை

"இளமையு நிலையாவா லினபமு நின்றவல்ல
வளமையு மஃதேயால் வைகலுந் துன்பவெள்ளம்
—வளையாபதி

நேற்று இருந்த ஒருவன் இன்று செத்தானென்று சொல்லும் நிலையாமையே அதிகம் உடையது இவ்வுலகம்.

நெருநலுள னொருவன் இன்றில்லை யென்னும்
பெருமையுடைத்திவ் வுலகு. —குறள்

"விண்ணிடு வில்லும் புனல்மேற் குமிழியும் மின்னுமென
மண்ணிடைத் தோன்றி யுமியுமிக் காயத்தை"
—கருவையந்தாதி

இப்போதே நின்றான், உட்கார்ந்தான், படுத்தான் தன் சுற்றத்தார் அலறியழும்படி இறந்தானென்று சொல்லப் படுதலால், புல்லினது நுனியில் உள்ள நீரைப்போல உடல் நிலை யில்லாமையை யுடையதென்று கருதி உடலோடு கூடியிருக்கிற பொழுதே அறத் தொழிலைச் செய்வாயாக.

புன்னுனிமேல் நீர்போ னிலையாமை யென்றெண்ணி
யின்னினியே செய்க வறவினை—யின்னினியே
நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்றானெனப் படுத லால்.

இது வரை ஒன்றிய கருத்துக்களைப் புகட்டும், நாலடியார்—திருக்குறள் கருத்துகளைக் கண்டோம். இதன் வழி நின்று உண்மையை உணர்த்தும், பெரும் புலமை யோடு வாழ்ந்த மாபெருஞ் ஞானி, குமர குருபர அடிகள் செல்வம், இளமை, யாக்கை இவற்றின் நிலையாமையை ஒரு பா வாயிலாகத்தெள்ளிதின் விளக்கிச் செல்வது படித்து இன்புறத் தக்கதாகும்.

நீரிற் குமிழியிளமை நிறை செல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காளென்னே
வழுத்தா தெம்பிரான்மன்று.

—நீதி நெறி விளக்கம்

ஆன்மாக்கள் பற்றை விடுவதற்கு, அவை இம்மையில் அனுபவித்தற்குரிய பொருள்கள் இன்பம் நுகர்தற்கு, இளமைப் பருவமும், அதற்குச் சாதனமாகிய செல்வமும், சரீரமும் முக்கிய பொருள்களாதலின், அவற்றை நிலையாமை உணர எடுத்துக் கொண்டவர் நீர்க்குமிழி தோன்றியழிதல்போல இளமை தோன்றி யழிதலின் "குமிழி இளமை" யெனவும், அலைகள் தோன்றும் போழ்து பெரியனவாகத் தோன்றி கரைசாரச் சார சுருங்குவது போலச் செல்வம் தோன்றும்போது பெரிதாகித் தோன்றி வரவரச் சுருங்கும் ஆதலின் "செல்வம் நெடுந்திரைகள் எனவும், நீரில் எழுதிய எழுத்து அப்பொழுதே யழிதல் போலத் தோன்றி சரீரம் உடனே அழிதலின் "நீரில் எழுத்தாகும் யாக்கை எனவுங் கூறி அந்நிலையாப் பொருள் களைக் கொண்டு நிலைத்தப் பொருளை பெறவேண்டுமென்று மேற்கண்ட பா வாயிலாக விளக்குகிறார்.

இனி நாம் ஒரு முடிந்த முடிவுக்கு வரவேண்டியவர் களாய் உள்ளோம். செல்வம் நிலையாமை (The Instability of riches), இளமை நிலையாமை (The Instability of Youth), யாக்கை நிலையாமை (The Instability of the body) என்பன எது பற்றி வற்புறுத்தப் படுகின்றன எனின் அறத்தினைச் செய்து உய்யு நெறியைக் காண்க என்பதைத் தெளிந்து அறியவேண்டும். எரிகின்ற விளக் காயினும், சுடரைத் தூண்டி ஒளியைப் பெருக்க, .கோல் வேண்டியிருப்பதுபோல வாழ்க்கை என்ற விளக்கைச் சுடர் விட்டு எரிந்து ஒளியை நல்க நிலையாமை ஒரு தூண்டு கோலாக அமைகிறது என்பது தேற்றம். அதுவே உயர்வை நல்கும்.

———

திருமூலர் மந்திரமும்-மெய்கண்டார் சிவஞான போதமும்

துடிசை கிழார்

(மலர் 24 ; இதழ் 6 ; 256-ம்பக்கத் தொடர்ச்சி)

(c) நூல்

தமிழ் மூவாயிரம்

கி. மு. 3000ல், ஆவடுதுறை அரனது அருளால்

" ஒன்றவன் றானே, இரண்டவனின் னருள்,
நின்றனன் மூன்றினுள், நான்குணர்ந்தான், ஐந்து
வென்றனன், ஆறுவிரிந்தனன், ஏழும்பர்ச்
சென்றனன், தானிருந் தானுணர்ந் தெட்டே "

என்று ஆரம்பித்து

" நீரும் நிலனும் விசும்பங்கி மாருதம்
தூரும் உடம்புறு சோதியு மாயுளன்
பேரும் பாரபரன் பிஞ்ஞகன் எம்மிறை
ஊரும் சகலன் உலப்பிலி தானே "

என்று பாடிமுடித்து இருக்கிறார்.

இந்த நூலில் 186வது செய்யுளில்

" போதந்தரும் எங்கள் புண்ணிய நந்தியை
போதந்தனில் வைத்துப் புண்ணிய ராயினர்
நாதன் நடத்தால் நயனங் களிகூர
வேதம் துதித்திடப் போயடைந்தார் விண்ணே "

என்று நந்தி அளித்த ஒரு ஞானநூலைப் பற்றிக் குறிப்பிடுவது காண்மின்.

சிவஞான போதச் சிறப்பாயிரத்திலும்

“ மயர்வற நந்தி முனிகணத் தளித்த
உயர்சிவ ஞான போதம் உரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய் கண்டகன்ற மெய்கண்ட தேவன் ”

என்றும்,

“ எந்தை சனற்குமர னேத்தித் தொழவியல்பாய்
நந்தி உரைத்தருளும் ஞானநூல்—சிந்தைசெய்து
தானுரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாமுணர
வது திருட்டாந் தத்தால் இன்று ”

என்றும் நந்தி அளித்த ஞானநூலைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது காண்க.

ஈண்டு முனிகணம் என்றது சனகர் முதல் திருமூலர் வரை உள்ள எண்மரை என்பது வெள்ளிடை மலை.

ஆதலின், நந்தி யெம்பெருமான் சனற் குமார முனிவருக்கு உரைத்ததும்—அவருடன் ஒரு சாலை மாணவராகப் படித்த சுந்தரநாதர் என்ற திருமூலருக்கு உரைத்ததும் ஒன்றேயாகும். அந்த ஞானநூல் எது ?

தற்காலம் நம் கையில் இருக்கும் சிவஞான போதம் என்னும் நூல் மெய்கண்டாரால் செய்யப்பட்டது என்பதில் ஐயம் ஒன்றும் இல்லை ; என்னெனின், ‘நந்தி உரைத்தருளும் ஞான நூலைச் சிந்தை செய்து பின் தான் வேறோர் நூலை யாத்தனன் ” என்று தானே சிறப்புப் பாயிரச் செய்யுள் கூறுகிறது.

மேலும், புறச்சந்தான முதற்குரவாகிய மெய்கண்டார் செய்ததனாலேதான் முதற் சூத்திரத்தில், “ என்மனார் புலவர் ” என்றும், ஆறும் சூத்திரத்தில்,

“ உணர்உரு அசத்தெனின் உணரா தின்மையின்
இருதிறன் அல்லது சிவசத் தாமென
இரண்டு வகையின் இசைக்கு மன்னுலகே ”

என்றும் கூறியுள்ளார்.

நந்தியெம்பெருமான் இந்நூலைச் செய்திருப்பாரே யாகில் பூவுலகின் கண் உள்ள புலவரும் உயர்ந்தோரும் இவ்வாறு கூறுகின்றார்கள் என்று கூறியிருக்கமுடியாது. ஆதலின் முனிகணத்துக்கு அளித்த உயர் சிவஞான போதநூல் எது? என்று ஆராய வேண்டியது நம் கடமையாகும்.

சிவஞான பாடியத்தில் சிவஞான முனிவர் கூறுவதாவது:—

"மகா சங்கார முடிவின்கண் உலகங்களை மீளப் படைத்தற் பொருட்டு பரமான்மாவாகிய பரமசிவத்தினுடைய பராசத்தி குடிலையை நோக்கியவழி, வேதாகமங்கள் குடிலையினின்றும் நாதவடிவாயும், அதன்பின் விந்து வடிவாயும், அதன்பின் அக்கரவடிவாயும் முறையே தோன்றின.

பின் அவற்றைச் சொற்றொடர்ப்படுத்துச் செய்யுளாக்கிப் பிறர்க்கு அருளிச் செய்தற்பொருட்டு பரமசிவன் ஈசான முதலிய பஞ்சப் பிரம மனுக்களாகிய சத்திகளை திருமுடி முதலிய அவயங்களாக சகள நிட்களத் திருமேனி கொண்டருளி சதாசிவ மூர்த்தியாய் நின்று, தற்புருட முதலிய நான்கு திருமுகங்களான் வேதங்களைத் தோற்றுவித்து, மேற்கண்ணதாகிய ஈசான முதலாகிய ஐந்து திருமுகங்களானும் காமிகம் முதலிய 28 ஆகமங்களையும் தோற்றுவித்து, வேதங்களை அநந்ததேவர் வழியானே பிரமனுக்கு அருளிச் செய்து, சிவாகமங்களை பிரதிசங்கிதை (வகுத்துக் கூறல்) முறையானே பிரணவர் முதலிய பதின்மரும் மகாருத்திரர் முதலிய பதினெண்மரும் ஆகிய 28 பேருக்கு சிவபேதம் உருத்திர பேதம் எனப்பகுத்து, ஓரோவொன்று ஒவ்வொருவருக்கு அருளிச் செய்து, பின்பு, மகவுக (திரட்டிக்கூறல்) முறையானே அவ்விருபத் தெட்டினையும் வித்தியேசர் எண்மரின் முதல்வராகிய அனந்ததேவருக்கு அருளிச் செய்தார். அவற்றை அநந்ததேவர் 118 உருத்திரரின் முதல்வாகிய சீகண்ட உருத்திரருக்கு அருளிச் செய்தார். அவற்றை சீகண்ட உருத்திரர் கணங்கட்கும் தேவர்க்கும் முனிவர்க்கும் அளித்தற்பொருட்டு முதற்கண் நந்தியெம்பெருமானுக்கு அருளிச் செய்தார்.

அங்ஙனம் கேட்டருளிய நந்தியெம் பெருமான் சீகண்ட முதல்வரை வணங்கி, சிவாகமம் தோறும் சரியை முதலிய நாற்பாதங்கள் சிறுபான்மை வேறு வேறாகக் கூறப்பட்டன. அவற்றுள் எது உண்மை என? சீகண்ட முதல்வர் "நன்றே வினவினாய்! அநந்ததேவர் எமக்கு அருளிச் செய்தவாறு கூறுகின்றோம். கேட்பாயாக" என்றருளி, "கற்பந்தோறும் படைப்பு வேறுபாடும் கேட்போர் கருத்து வேறுபாடும் பற்றி அவற்றிற்கு இயைய சரியை முதல் மூன்றுபாதங்கள் வெவ்வேறாக கூறப்பட்டன. ஆதலால் ஞானபாதமாவது பொருட்டன்மை உணர்த்துவதாகலான் அது பலதிறப்படுதல் பொருந்தாது. அவையெல்லாம் தூலாருந்ததி நியாயம் பற்றிக் கூறப்பட்டனவன்றி மாறுகோளல்ல என்பது உணர்த்துதற்பொருட்டு, எல்லா ஆகமப் பொருள்களையும் மாறுகோளின்றி இனிது விளக்கும் சிவஞானபோதம் என்னும் நூலை எமக்கு அருளிச் செய்தார். அதனைக் கேட்பாயாக" என்று அதனை உபதேசம் செய்தார்.

நந்தியெம்பெருமான் அது கேட்ட துணையானே எல்லா ஐயமும் நீங்கி மெய்ப்பொருள் தெளிந்து, அதனைத் தம் மாணாக்கருக்கு அருளிச் செய்தார்!" என்பதே.

இதனால் நாம் என்ன தெரிகிறோம் என்றால் அநந்த தேவர் ஆகமங்களின் பொருள்களைத் திரட்டி சீகண்டருக்குச் சொல்ல, அவர் அதனை நந்தியெம்பெருமானுக்குச் சொல்ல அவர் தம் மாணாக்கர் எண்மருக்கும் போதித்தார் என்று தெரிகிறது.

அந்நூல் எந்த வடிவத்தில் இருந்தது? என்பது பாஞ்சோதி முனிவர் தாம் தம் குருவினிடத்தில் கேட்ட முறையானே 39 சூர்ணிகைகளை இரண்டாம் மெய்கண்டாருக்கு உபதேசித்து, அச்சூர்ணிகைகள் நமக்குக் கிடைத்திருப்பதால் அறியலாம்.

ஆதலின், நந்தி முனி கணங்களுக்கு அளித்த ஞான நூல் என்பது 39 சூர்ணிகைகளைக் கொண்ட சுவடியேயாகும்.

திருமூலரும் "போதந்தரும் எங்கள் புண்ணிய நந்தியை" என்று இந்த சூர்ணிகைச் சுவடியையே குறிப்பிடுகின்றார்.

பரஞ்சோதி முனிவர் உபதேசம் செய்து விட்டுச் சென்றபின், மெய்கண்டார் அவர் உபதேசித்த சூர்ணிகைகளைச் சிந்தித்துக்கொண்டிருக்க பொல்லாப் பிள்ளையாரின் அருளால் 39 சூர்ணிகைகள் அடங்கிய வேறொரு சுவடியும் கிடைத்தது. அதனை மெய்கண்டார் ஆராய்ந்தபோது இரண்டும் பொருளில் ஒன்றுபட்டிருந்தாலும், சொற்கள் வித்தியாசப்பட்டிருப்பதைக் கண்டார். அச்சுவடியின் அடியில் 'சுவாமிநாத தேசிகர்' என்ற கையொப்பமும் இட்டிருந்தது.

இதனால், மெய்கண்டார் பரஞ்சோதி முனிவரிடம் கேட்பதற்கு முன்னேயே மேற்கண்ட சூர்ணிகைகள் உலகில் வழக்கில் இருந்தன என்பது போதருகின்றது.

மெய்கண்டார் கி. பி. 1228-ல் சிவஞானபோதம் செய்வதற்கு முன்னமேயே கி. பி. 1147-ல் திரு உந்தியாரும் கி. பி. 1177-ல் திருக்களிற்றுப்படியாரும் செய்யப்பட்டு உலகில் வழக்கில் இருந்தன. அவ்விரண்டு நூல்களையும் படித்தால் மேற்கண்ட 39 சூர்ணிகைகளை அடிப்படையாகக் கொண்டே செய்யப்பட்டுள்ளன என்பது வெளியாகும்.

கி. மு. 3100 முதல் கி. மு. 100 வரை உள்ள மூவாயிரம் ஆண்டுகளில் 'தமிழ் மூவாயிரம்' என்ற நூலை யாத்து திருமூலர் தம்முடைய எழு மாணவர்களுக்கு—மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், கந்துரு, காலாங்கி கருமலையான்—போதித்து, உலகில் சிவநெறியைப் பரப்பும்படி அருள் செய்தார். அந்தப்படி அவர்கள் பல இடங்களில் மடங்களைத்தாபித்துச் சிவநெறியை—திருமந்திரத்தைப் பரப்பினார்கள். அந்தப் பரம்பரையில் வந்தவர்கள் தான் திருவியலூர் உய்யவந்த தேவநாயனார்—ஆளுடைய

தேவர்—அவர் மாணுக்கர் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனுர் ஆவர்.

ஞானபரம்பரைகளின் மாணவர் வழிப்பட்டியைத் தனியாகக் குருமட வரலாறு என்று எழுதிவைத்துள்ளேன். ஆண்டுக் கண்டு கொள்க.

மெய்கண்டாருக்கு முன்னமேயே 39 சூர்ணிகைகள் அடங்கிய சுவடி உலகில் பாவி இருந்ததால்தான், மெய்கண்டார் தம் நூலில் 'என்மனுர்புலவர்' என்றும் 'இசைக்கும் மன் உலகே' என்றும் கூறுவாராயினர்.

(d) நூல் ஒற்றுமை

இனி, மெய்கண்டார் செய்த சிவஞான போதத்திற்கு முந்தினது 'தமிழ் மூவாயிரம்' ஆனதால் அவ்விரண்டு நூல்களிலும் உள்ள கருத்து ஒற்றுமையைச் சிறிது காணலாம் :—

சிவஞான போதம்	ஒரு மந்திரம்
1—2—3 சூ.	பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில் பதியினைப் போல் பசுபாசம னாதி பதியினைச் சென்றணு காப்பசு பாசம் பதியணு கிற்பசு பாச நிலாவே
போதம்	மந்திரம்
4-ம் சூ.	தன்னை யறியத் தனக்கொரு தீங்கில்லை தன்னை யறியாமல் தானே கெடுகின்றான் தன்னை யறியுமறிவை அறிந்தபின் தன்னை யர்ச்சிக்கத் தானிருந் தானே

(இ-ள்) ஆன்மாவானது பல பிறவிகளை எடுத்து,

"உண்டதே உண்டு, உடுத்ததே உடுத்தும்,
உரைத்ததே அடுத்தடுத்து உரைத்தும்,
கண்டதே கண்டும், கேட்டதே கேட்டும்,
கழிந்தன கடவுள் நாள் எல்லாம்"

என்றபடி பந்தமெய்தி மாணத்தை அடைதலால், அது நீங்குமாறு, தன்னியல்பைத்தான் விசாரித்துக் கொள்ள அதனுல் தனக்கு ஒரு கேடாகிய பிறப்பிறப்பு இல்லையாகும்.

தான் இவ்வகையினன் என்று தன்னைத்தான் தோராமையினுல், எல்லாத் துன்பங்களும் தன்னைத் தொடா, தான் அப்பிறப்பிறப்பு வேலையில் அமர்கின்ருன்.

தன்னைத்தான் தோராமை ஆன்மதரிசனம் செய்யாமை.

தன்னை அறியுமறிவாகிய தலைவனைத்தான் அறிந்த பின்பு தலைவன் இல்லாமல் தான் இல்லாமையினுலே, தான் அவனைப் பூசிக்கத் தான் அவனுடன் பிரிப்பின்றி இருப்பான்.

தன்னை அர்ச்சித்தலாவது சிவோகம்பாவனை செய்தல். "தன்னை அறிந்தவன் தலைவனையுமறிவான்" என்பது பழமொழி.

போதம் மந்திரம்

5 ம் சூ. பொட்டடித் தெங்கும் பிதற்றித் திரிவேனை
பொட்டடித் துள்ளமர் மாசெலாம் வாங்கி
தட்டொக்க மாற்றினன் தன்னையும் என்னையும்
வட்டமது ஒத்தது வாணிபம் வாய்த்ததே

(இ-ள்) சைவ ஆகம நாற்பாதப் பொருள்களை எல்லாம் நொறுக்கி அடித்து, உலகியற் பொருளாகிய பொய்யை மெய்யென்று மயங்கி, அதனைப் பிதற்றிக்கொண்டு வாயாடியாகத் திரிவேனை, மானைக்காட்டி மானைப்பிடிப்பது போல, என்னை வசம் செய்ய மானிட வடிவங்கொண்டு குருவாக வந்து, என் நெஞ்சத்தமர் மாசெலாம் நீக்கி, நிறுக்கப்பட்ட பண்டங்களைத் தாசுத் தட்டிலே மாற்றி வைத்தாற் போல, தன்னிடத்தில் என்னையும், என்னிடத்தில் தன்னையும் மாற்றிவைத்து, அருளினுன். வாசியாகிய வட்டமதொத்தது; ஆதனுல், வாணிபம் எனக்கு வாய்த்தது.

இதனை மாணிக்க வாசகர்

"தந்தது உன்றனைக் கொண்டது என்றனைச்
சங்கரா ! யார்கொலோ சதுரர் ?
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றது ஒன்று என்பால்"

என்று அழகுபடக் கூறியுள்ளார்.

வாணிபமாவது—ஈண்டு ஆன்மலாபம். அதுதான் 'அந்தம் ஒன்றில்லா ஆனந்தம்': இதனைச் சித்தியாரில் :—

"மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாதம் மேவுதலும்,
ஞானம் விளைந்தோர் குருவின் அருளால்
புக்கு அநுட்டித்தே நிட்டை புரிந்துள்ளவர்கள்
பூதலத்தே புகழ்சிவன் முத்தராகி,
தக்க பிர்மாப் பிரியமின்றி ஒட்டில் தபநியத்தில்
சமபுத்தி பண்ணிச் சங்கரனோடு
ஒக்க உறைந்து இவர் அவனை அவன் இவரை விடாதே
உடந்தையாய் சிவன் தோற்றம் ஒன்றே காண்பர்.

போதம் மந்திரம்

10-ம் சூ.

என்னை யறிந்திலன் இத்தனை காலமும்
என்னை யறிந்தபின் ஏது மறிந் திலேன்
என்னை அறியு மறிவை யறிந்தபின்
என்னை விட்டு உன்னை உசாவுகின் றேனே

(இ—ள்) உடல் கருவி, உலக, இன்பங்களாகிய பாசமே பதியாகத் தோன்றும் மயக்க அறிவால் இத்தனை காலமும் யான் என் இயல்பை அறியாமல் இருந்தேன்.

சத்தி நிபாத மெய்தி அப்பாசம் பொய்யாகத் தோன்றுகையால், என் இயல்பை அறிந்தபின் மற்று ஒன்றையும் அறிந்திலேன்.

(தொடரும்)

மதிப்புரை

சச்சபுட வேண்பா :—குறிப்புரைகளுடன் தருமபுர ஆதீனத்து 245-ம் நூலாக வெளியிடப்பட்டது. இந்நூல் 24-ம் சன்னிதானத்து ஆருவது குருபூசை விழாவின்போது அதாவது 13-6-51-ல் வெளியிடப் பட்டது. இது இசைத் தமிழில் தாளம் என்ற பகுதியைப் பற்றிக் கூறும் அரிய நூல். திரு. ச. தண்டபாணி தேசிகர் மிக அரிய ஆராய்ச்சி உரையுடன் வெளியிட் டிருக்கின்ருர். 113 தாளங்களின் இலக்கணங்கள் கூறப்பட் டுள்ளன. ஆராய்ச்சியாளர் இதுவரை வெளிவராத இந்நூலை ஏட்டும் பிரதியிலிருந்து எடுத்து வடமொழி நூல்களை ஒத்திட்டுக் குறிப்புரைகளுடன் வெளியிட்டிருக்கின்ருர். இந் நூலை இயற்றியவர்: வரகுணராமன் என்ற பாண்டியமன்னர் எனத் தெரிகின்றது (1613 கி. பி.) அக்காலத்து மன்னர்கள் இசைத் தமிழிலும் எத்தனை வல்லமை பெற்றிருந்தார்கள் என்று இந் நூல் காட்டுகின்றது. ஒரே ஒரு பிரதி கிடைத்ததினுல் அதில் காணுத சில பாடல்கள் விடுபட்டன. பின் பதிப்பில் சேர்த்து வெளியிடப் பிற இடத்துப் பிரதிகள் உதவிபுரியும் என்று நம்பப்படுகிறது. அதற்கு இசைப்பிரியர்கள் பிரதிகளைத் தேடி அனுப்பினுல் நலமாக இருக்கும் அல்லவா ? இவ்வருமையான நூலைப் பதிப்பித்த தருமபுர ஆதீனத்தார்க்குத் தமிழ் உலகம் கடமைப்பாடுடையது.

Asthma-a cure without drugs என்ற ஆங்கில வைத்திய நூல் இலங்கையின் பிரபல மேனுட்டு வைத்தியரான திரு. T. நல்லைநாதன் அவர்களால் எழுதப்பட்டது. மருந்தில்லாமலே இக்கொடிய நுரை ஈரல் சம்பந்தமான நோயை எப்படி போக்கலாம் என்று எழுதியுள்ளார். ஆஸ்த்மா என்னும் நோய் எப்படி ஏற்படுகிறது என்று கூறுவதுடன் சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம் சிரஸாசனம், நௌலி அர்த்தமத்ஸ்யாசனம், சிரஸாசனம் முதலிய ஆசனங்களை முறையாகச் செய்வதால் எப்படி இக் கொடிய நோயை மருந்தில்லாமல் போக்கிக் கொள்ளலாம் என்று விவரமாக எழுதியுள்ளார். இதன் தமிழ்மொழி பெயர்ப்பு சீக்கிரம் வெளிவரும். விலை ரூ. 9-50 கிடைக்குமிடம் டாக்டர்-T. நல்லைநாதன், 'கதிரமலை' castle lane - பம்பலபித்தியா, கொழும்பு, சிலோன்.

செய்தித் திரட்டு

20, 21, 22—5-51-ல் அகில இலங்கை சைவமாநாடு யாழ்ப்பாணம், திரு C.K. சுப்பிரமணிய முதலியார் தலைமையில் நடைபெற்றது. பல பெரியார்கள் பேசினார்கள். அதன் பிறகு முதலியார் அவர்கள் பல ஊர்களிலும், கொழும்பிலும், கதிர் காமத்திலும் சைவச் சொற்பொழிவுகள் இயற்றினார்கள்.

26, 27, 28-5-51-ல் திருப்பதி, திருமலை, ஸ்ரீவேங்கிடேசுவரர் கீழ்க்கலைக் கல்லூரியால் நடத்தப்பெற்ற இந்து சமயக் கோடை வகுப்பில் சித்தாந்த ஆசிரியர் சைவ சித்தாந்தத்தைப் பற்றி மூன்று சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள்.

9-6-51-ல் திருப்பேரூரில் சேக்கிழார் திருக்கூட்டத்தார் ஆராதனை புராணச் சொற்பொழிவு முதலியவைகளைத் தொடர்ச்சியாக நடத்தினார்கள்.

13-6—51-ல் தருமபுர ஆதீனம் 24-வது மகா சன்னிதானத்தின் குருபூசை நடைபெற்றது. பல சைவச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

14-6-51-ல் இராமேசுவரம் இராமலிங்கப் பிரதிட்டை மகோற்சவம் நடந்தது. அதனைத் தொடர்ந்து சொற்பொழிவுகளும் இன்னிசைகளும் நடைபெற்றன.

15, 16, 17-6-51-ல் காவிரிப்பூம் பட்டினத்தில் திரு. R. K. S. செட்டியார் தலைமையில் சிலப்பதிகார மாநாடு நடைபெற்றது. பல பெரியார்கள் பேசினார்கள்.

16, 17, 18-6—51-ல் தஞ்சைத் திருக்கோட்டூரில் கோயில் திருப்பணிக் குடமுழுக்குத் திருவிழா நடைபெற்றது. 16—ம் தேதி சித்தாந்த ஆசிரியர் திருக்கோயில் என்பதைப்பற்றிப் பேசினார்கள். பிறகு திரு. பஞ்சநதம் பிள்ளை அதனை ஒட்டிப் பேசினார்கள். குடமுழுக்கு வெகு சிறப்பாக நடைபெற்றது.

21, 22-6-51—ல் திரிசிரபுரம் சைவசித்தாந்த சபையில் (மலைக்கோட்டை) குன்றக்குடி அருணாசல தேசிக சுவாமிகள் தலைமையில் 66-வது ஆண்டுவிழா நடைபெற்றது. பல சொற்பொழிவுகள் ஆற்றப் பெற்றன.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street. Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 116), Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 40, Muthiah Mudali Street, Vellala Teynampet, Madras-6, P.I.Card No. M. S. 81.